

# திறவுகோல்

2057 ஐப்பசி

மாத இதழ்

வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
*https://maintharkal.mannai.in/*

# அஞ்சல் வாக்குகள் அதிகரிக்க இந்த அரசு என்ன செய்ய வேண்டும்?

ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் தாம் தெரிந்து செய்யும் தம் தவறுகளை மறைத்து தாங்கள் தூய சக்திகள் என்று நிரூபிக்க இவர்களைப் பலிகடாக்கள் ஆக்குவது என்பது தொன்றுதொட்டு நடந்து வருவது அறியத்தக்கது. தற்போது அத்தகைய நோக்கும் போக்கும் மலிந்து வருவது வேதனைக்குரியதாக உள்ளது. இதற்கு முட்டுக்கொடுக்கும் வகையில் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களும் உள்நோக்கத்துடன் செயல்படும் ஊடகவாதிகளும் அதிகாரிகளை மட்டும் குற்றம் சாட்டுவதும் ஆளும் வர்க்கத்துக்கும் இதற்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை என்பதாகப் பரப்பப்படும் மக்கள் விரோத செயல்கள் அனைத்திற்கும் காரணம் கற்பிப்பது என்பது நகைப்பிற்குரியது.

குறிப்பாக, எந்தவொரு அரசு அலுவலகங்கள் மற்றும் ஊழியர்கள் தாமே முன்வந்து இலஞ்சம் மற்றும் ஊழல் ஆகியவற்றில் ஈடுபடுவதில்லை. இவர்கள் அரசியல்வாதிகளால் நேரிடையாகவும் மறைமுகமாகவும் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் என்பதே உண்மை. நேர்மையாகச் செயல்படும் அரசு உயர் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் செல்வாக்குள்ளவர்களால் எத்தகைய கொடும் இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர் என்பது நாடறிந்ததே. சிலர் பரிதாபமாக இதன் காரணமாக உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2026 சட்டமன்ற பொதுத் தேர்தல் என்பது ஒரு விசித்திரமான தேர்தலாகும். ஒரு புதிய மாற்றம் நிகழாதா என்று எல்லா தரப்பினரும் ஏங்கித் தவித்தக் காலகட்டத்தில் யாரும் எதிர்பாராத ஒரு புத்தம் புதிய அரசு முடிசூட்டிக் கொண்டது. திராவிட கட்சிகளின் தொடர் ஆட்சியின் மீதான வெறுப்பும் சலிப்பும் முக்கிய காரணங்கள் ஆகும். மேலும், திராவிட மாடல் ஆட்சியில் நடைபெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் விரோத போக்குகளால் பவளவிழா மற்றும் பொன்விழா கட்சிகளின் மீது தீராத வெறுப்பும் அவநம்பிக்கையும் கொண்டு சக மனிதர்கள் போல் அடிமனதில் தளும்பிய திரைக் கவர்ச்சி மற்றும் நாயக மோகம் காரணமாகப் பழக்கத்திற்கு அடிமையாக இருந்தவர்கள் பலரும் தடம் புரண்டதால் அவை பொதுத்தேர்தலில் அஞ்சல் வாக்குகளாகப் போய் குவிந்தன.

தமக்கு ஒரு 'மீட்பர்' கிடைத்துவிட்டார் என்ற நம்பிக்கையில் பாதிக்கப்பட்டோர் அனைவரும் ஒற்றைப் புள்ளியில் இணைந்து ஒரு விரல் புரட்சி செய்ய தயாராகி இருந்ததை பின்வரும் புள்ளிவிவரங்கள் வழி காணவியலும். மதுராந்தகம் தொகுதியில் 2026 - பொதுத் தேர்தலில் மொத்தம் பதிவான 1962 வாக்குகளில் தற்போதைய ஆளும் கட்சி 352 வாக்குகளும் எதிர்கட்சிகளான திமுக, அதிமுக முறையே 790, 740 வாக்குகளும் நாதக 53, மற்றவை 27 வாக்குகளும் இடைத்தேர்தலில் மொத்தம் பதிவான 864 வாக்குகளில் திமுக

*358, அதிமுக 322, தவெக 137, மற்றவை 47 வாக்குகள் பெற்றுள்ளது நோக்கத்தக்கது.*

*அதேபோல், தாராபுரத்தில் 2026 இல் நடைபெற்ற சட்டமன்ற பொதுத்தேர்தலில் மொத்தம் பதிவான 2351 வாக்குகளில் திமுக 1037, அதிமுக 852, தவெக 339, நாதக 90 மற்றவை 33 வாக்குகளும் இடைத்தேர்தலில் மொத்தம் பதிவான 1316 வாக்குகளில் திமுக 613, அதிமுக 406, தவெக 255, நாதக 19, மற்றவை 23 வாக்குகளும் பெற்றுள்ளது ஒப்பு நோக்கத்தக்கது.*

*இவ்விரண்டு புள்ளி விவரங்கள் மூலம் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் நம்பிக்கையினையும் நம்பகத்தன்மையையும் தற்போதைய ஆளும் அரசு பெற மேலும் முயற்சியும் முனைப்பும் காட்ட வேண்டும் என்பது தெள்ளத் தெளிவாகிறது. இந்திய மக்களாட்சி தேர்தல் நடைமுறையில் ஒவ்வொரு வாக்கும் மிகவும் முக்கியமாகிறது. தற்போதைய ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் ஒற்றை வாக்கில் வெற்றி பெற்று உள்ளது குறிப்பிடத்தக்கது.*

*அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் வாக்கை தனிநபர் வாக்காக மட்டும் கருதாமல் பல்வேறு குடும்ப நபர்கள் உள்ளடக்கிய கூட்டு வாக்காகப் பார்க்க வேண்டியது மிகவும் அவசியம். ஆக, அதற்கேற்ப அத்தகையோரின் நம்பத்தகுந்த பாதுகாவலராகத் தம்மைத் தகவமைத்துக் கொள்ள வேண்டியது ஏனைய கட்சிகளைக் காட்டிலும் ஆளும் கட்சிக்கு அதிக கடப்பாடு உள்ளது. அரசின் அனைத்து மக்கள் நலன் சார்ந்த திட்டங்களைச் செவ்வனே நிறைவேற்றும் இடத்தில் இவர்கள் தாம் இருக்கின்றனர்.*

*தவிர, நடுத்தர வர்க்கத்தினராக மாத ஊதியத்தை மட்டும் நம்பி வாழும் இவர்களுக்கு அரசு ஊழியர் என்ற முத்திரை குத்தி எந்தவொரு நலத் திட்ட உதவிக்கும் தகுதியற்றவர்களாக இவர்களும் இவர்களது குடும்பத்தினரும் ஆக்கப்படுவது அறியத்தக்கது. பொதுமக்களுக்குப் பல்வேறு மக்கள் நலத்திட்ட உதவிகள் செய்வதில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு எந்தவொரு மாறுபட்ட கருத்துகளும் எப்போதும் இருந்தது கிடையாது. அதேபோல், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அவர்கள் தம் நடைமுறை வாழ்க்கையில் ஓரளவு கண்ணியத்துடன் வாழ அவர்களது வாழ்வாதாரத்தைத் தாங்கிப் பிடிக்கும் இடத்தில் அரசு இருப்பதை பொதுமக்களும் உணர்வது மிக அவசியம்.*

*ஓர் அரசு இருதரப்புக்குமானது. ஒரு தரப்பினரைப் பட்டினிப் போட்டு விட்டு இன்னொரு தரப்பினருக்கு மட்டும் கஞ்சி வார்க்க நினைப்பது என்பது துரதிர்ஷ்டவசமானது. அரசின் அனைத்துத் துறைகளிலும் பணிபுரியும் உயர் அலுவலர்களுக்கு அனைத்துவித சலுகைகளும் வாகன வசதிகளும் வீட்டுவேலை செய்ய பல்வேறு பணியாளர்களும் பொதுமக்கள் வரிப்பணத்தில் ஆட்சி செய்யும் அரசுவழிக் கிடைக்கப் பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. பி, சி மற்றும் டி பிரிவு பணியாளர்கள் யாருக்கும் மாதந்தோறும் வழங்கப்படும் ஊதியம் தவிர ஏனைய எந்தவொரு சலுகையும் அரசால்*

வழங்கப்படுவதில்லை என்பது உணரத்தக்கது. அவ்வப்போது அரசால் வழங்கப்படும் முன்பணக் கடன்கள் பலவும் சம தவணைகளாக மாதந்தோறும் பிடித்தம் செய்யப்பட்டு விடும்.

எனவே, ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களின் பன்னெடுங்கால அடிப்படை வாழ்வாதாரக் கோரிக்கைகள் இன்னும் தீர்வு எட்டப்படாமல் இருப்பது கவனிக்கத்தக்கது. குறிப்பாக, பழைய ஓய்வூதியம், மத்திய அரசுக்கு இணையான ஊதிய நிர்ணயம், ஊக்க ஊதிய உயர்வு, பணிப் பாதுகாப்புச் சட்டம், தணிக்கைத் தடைகள், பதவி உயர்வு கலந்தாய்வு, தகுதித் தேர்வு விலக்கு, புதிய பணி நியமனம் உள்ளிட்ட ஆசிரியர் சங்கங்கள் கோரும் முதன்மையான 20 அம்ச கோரிக்கைகளை ஆளும் வெற்றி அரசு நிறைவேற்ற நிச்சயம் முன்வர வேண்டும். அப்போதுதான் இந்த அரசு மீது அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நம்பிக்கை பிறக்கும். அதுமட்டுமின்றி, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் அஞ்சல் வாக்குகள் எதிர்வரும் காலங்களில் இந்த நல்லெண்ண நடவடிக்கைகள் காரணமாக மெல்ல அதிகரிக்கக் கூடும் என்பது திண்ணம்.

- எழுத்தாளர் மணி கணேசன்

---

# பார்த்ததில் பற்றியது..!

நீ பார்த்த போது
நான் பார்க்கவில்லை
நான் பார்த்த போது
நீ பார்க்கவில்லை.

நீ பார்த்தபோதும்
நான் பார்த்தபோதும்
நாம் பார்த்துக்கொண்டோம்
உனக்குள் என்னையும்
எனக்குள் உன்னையும்

நீ என்ன பார்த்தாய் என்னிடம்
நான் என்ன பார்த்தேன் உன்னிடம்
ஏதோ ஒன்றனை மனம்
எதிர் பார்த்ததைத்தானே

நானும் பார்த்துக்கொண்டுதான்
இருக்கிறேன் நீ பார்ப்பதை
நீயும் பார்த்துக்கொண்டுதான்
இருக்கிறாய்
நான் பார்ப்பதையும்.

இருவரும் பார்த்துக்கொண்ட
அந்தத்தருணம் மழைத்துளியும் செடியும்
உரசிக்கொண்ட சுகம்

பார்வையில் இருக்கும் சுகம் யாதெனில்
தேடிப்பார்த்தேன் வார்த்தைகள் இல்லை
எங்கே மீண்டும் ஒருமுறை பார்
எதற்கும் கம்பனிடம்
கேட்டுப்பார்க்கிறேன்.!

- நேசன் மகதி

# கவிச்சோலை

நீண்டப் பகலொன்றினை
எவ்விதச் சலனமுமின்றி
விழுங்கி முடித்து
நாளை விடியலில்
லாவகமாய் வந்து
வலிகளைத் தருமே சூரியன்
அதுகுறித்த கவலைதான்
இவ்விரவில் எனக்கு.
/

என்னிதயப் பழத்தை
வலிக்காமல் ருசிக்கிறது
அவளின் பார்வைக் கிளிகள்.
/

கைகளை
மேலே உயர்த்தியபடி
எம்பிக் குதிக்கிறேன்
எனக்கு எட்டவில்லை கனிகள்.
இனி மரமும் காற்றும்தான்
மனது வைக்க வேண்டும்.
/

இலக்கியக் கூட்டத்தில்
உரையாற்றிக் கொண்டிருக்கிறேன்.
உரைக்கு இடையே
கவிதையொன்றைச் சொல்கிறேன்.
மீண்டுமொரு
கவிதைக் கேட்கிறார்கள்.
அதே கவிதையை
மீண்டும் சொல்கிறேன்.
அதே கவிதையை
மீண்டும் கேட்கிறார்கள்.



அந்தவொரு வார்த்தையை
மூன்று முறைச் சொல்லிமுடிக்கிறேன்.
பலத்த கரவொலி அடங்க
காலதாமதமானது
உண்மைதான்.
அந்தக் கூட்டத்தில்
முதன்முறையாய்
அழகிய கவிதையானது
உனது பெயர்...!

- பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம்,
பேச: 9443139353

# என்னவளுக்கு ஓர் கடிதம்

வெற்றிடமாய் இருந்த என் நெஞ்சில்;
வெற்றியின் இடமாய் வெளிச்சம்
கொண்டவள் நீ!
வற்றாத ஆறெங்கும் வளத்தினையே தருவது
போல்; பற்றோடு என் வாழ்வை பரவசமாய்
ஆக்கியவள் நீ!
பெற்றோர்கள் சேர்ந்ததனால்
பெருஞ்செல்வம் என்பது போல்
பெருமையென வந்தவள் நீ!
பேருண்மை நான் சொன்னால், பேராற்றல்
அன்புடனாய் என்னைப்
பேராண்மை கொண்டவனாய்
ஆக்கிவிட்டாய்!



- வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
திண்டுக்கல்.

# விருதும் எழுத்தாளனும்

விருதை நேராக வந்தால் தான் தருவோம் என்று நிபந்தனையாக போடுவதெல்லாம் அநியாயம் என்றே நினைக்கிறேன்.

ஊன் உருக உயிர் கரைய எழுதுகிறான். சரி அவ்ளோ சிரமப்பட்டு என்னத்துக்கு எழுதற என்று பொத்தாம் பொது கேள்வி இயல்பு. ஆனால் அது அறிவின் வழியாக இந்த மானுடத்தின் தொடர்ச்சிக்கு எப் பக்கமிருந்தும் இவ்வாழ்வை உணர்ந்து அதை அடுத்த தலைமுறைக்கு கடத்துகிறான் என்பதை எப்படியாவது புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். அவ்ளோ சிரமப்பட்டு ஏன் உழவு பார்க்கற என்று கேட்பது போல தான்.. ஏன் எழுதற என்று கேட்பதும்.

ஏதோ காரணங்களால் வந்து விருதை வாங்க முடியாத சூழலில் அந்த அமைப்பினர் அதை அனுப்பி வைப்பது தானே முறை. அதுதான் எழுத்தாளர்களுக்கு செய்யும் மரியாதை.

எழுதுகிறவன் தலை ஒருபோதும் குனியாது. அப்படி குனிந்து தான் அந்த விருது வரும் என்றால் அப்படி ஒரு தலைகுனிவை தனக்கு தானே அவன் ஒருபோதும் செய்து கொள்ள மாட்டான்.

சமீபத்தில் நடந்த இந்த அவமரியாதை... விருதுகள் மீது மட்டுமல்ல அதை தரும் அமைப்பாளர்கள் மீதும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. விருது கிடைத்திருக்கிறது. மகிழ்வு. ஆனால் வாங்க முடியாத சூழல். அனுப்பி வையுங்கள் என்று மிகத் தாழ்மையுடன்தான் செய்தி அனுப்புகிறோம். ஆனால் அதற்கு பதிலே இல்லை என்பதை எப்படி புரிந்து கொள்வது. வேணும்னா வந்து வரிசையில் நின்னு வாங்கிக்கோன்னு புரிந்து கொள்வதா. நிகழ்வில் கலந்து கொள்ளாதவர்களை கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை என்று சொல்லாமல் சொல்கிறார்களா.

எழுத்தாளனை எழுத்தானாக மதிப்பது இருக்கட்டும். ஒரு மனிதனாக மதிக்கலாம் தானே. நூல் விருது வாங்கி இருக்கிறது. அதை வாங்க அவரால் வர முடியவில்லை எனில் அதை அவருக்கு அனுப்பி வைப்பதுதானே மரியாதை. முறை. சரி உபரகாரம் உதவி என்றே வைத்துக் கொள்ளலாம். அதைக்கூட செய்ய மனம் வரவில்லை என்றால் என்ன மனநிலையில் விருது கொடுக்கிறார்கள் என்று கேட்க தோன்றும்தானே. அத்தனை நூல்களையும் வாசித்து விருதுக்கு தேர்ந்தெடுப்பது சுலபமான விஷயம் இல்லைதான். அதுவும் நிகழ்வு நடத்தி முடிப்பது என்பது மலையை சுமப்பதுதான். அதற்கு வணக்கம் சொல்வோம். பாராட்டுவோம். ஆனால் வந்து வாங்க இயலாத சூழலில் அந்த விருதை என்ன செய்வது. அப்படியே கிடப்பில் போட்டு விடலாமா. அப்படி என்றால்... நேராக வந்தால்தான் விருது

என்று சொல்வது போல தானே அந்த செயல் இருக்கிறது. நேரில் வராவிட்டால் தேர்ந்தெடுத்தது தப்பென்று ஆகி விடுமா.

விதிமுறைகளும் ஒழுங்குமுறைகளும் இல்லாமல் இருக்கலாம். ஓர் எழுத்தாளனுக்கு தரும் மரியாதை என்ற முறையில் இருக்கலாம்தானே. அந்த விருதை அனுப்பி வைத்தால் என்ன குறைந்து விடும். அதுவும் அவன் சூழலை விளக்கி சொல்லி முகவரி அனுப்பிய பிறகும் இப்படி கள்ள மௌனம் சாதிப்பது சரியல்ல. எவ்ளோ செலவாகிட போகுது. அனுப்பி வைத்து விட்டு இவ்ளோ என்றால் அதை ஜிபேயில் அனுப்பி விடப் போகிறோம்.

அனுப்பாதது குறித்துகூட சரி என்று விட்டு விடலாம். எந்த பதிலும் சொல்லாமல் மௌனமாக கடந்து போகிறார்களே... அதுதான் இம்மாதிரி அமைப்புகள் மேல் சந்தேகம் வருகிறது. இது நல்ல நூல்களை இனம் காணுவதா. அதன் மூலம் தன் அமைப்பை நிலை நிறுத்திக் கொள்வதா என்று.

அனுப்ப இயலாது... இந்த பக்கம் வரும் போது வாங்கிக் கொள்ளுங்கள் அல்லது.. தெரிந்தவர் இங்கு யாராவது இருந்தால் சொல்லுங்கள் கொடுத்து விடுறோம்.. இப்படி ஏதாவது ஒரு பதில் சொல்லி இருக்கலாம். அது போதும் என்றாகி இருக்கும். அந்த சின்ன கர்ட்டஸி இல்லாமல் போகையில் தான் இத்தனை எழுத வைக்கிறது. வாசகர்கள் இல்லாமல் யாருக்கு எழுத முடியும் என்பது போல.. எழுத்தாளர்கள் இல்லாமல் யாருக்கு விருது கொடுக்க முடியும்.

இரண்டு வருடங்களுக்கு முன் இதே போல ஆனது. அந்த அமைப்பாளர்கள் அவர்களாகவே வீட்டு முகவரிக்கு அனுப்பி விட்டார்கள். ஜெம் அமைப்பு.

பொதுவாக விருது நம்மை ஊக்கப்படுத்தும். ஆனால் இந்த விருது மனக்கசப்பையே தந்திருக்கிறது. பணம் கூட வேண்டாம். விருதை மட்டும் அனுப்புங்கள் என்று கேட்டதற்கும் பதில் இல்லை. அது என்ன மனநிலை என்று புரியவில்லை. இவ்வளவு தான் ஒரு எழுத்தாளனுக்கு மரியாதை. வேறென்ன சொல்ல. எழுத்தே வாழ்வென்று இருப்பவனுக்கு பணம் எப்போதும் அடுத்து தான். அது இல்லாமல் இருக்கும் சூழலிலும் அதை வெளிப்படுத்த மாட்டான். ஆனால் அங்கீகாரம்.. நாலு கைதட்டல் ரெண்டு பாராட்டு... எப்போதாவது அத்தி பூத்தாற் போல இம் மாதிரி கிடைக்கும் விருது. இதுதான் அவனுக்கு ஊக்க சக்தி. அதை போனா போகுது என்றோ... வந்தா வாங்கிக்கோ என்றோ ஒரு மலிவான தோற்றத்தில் கையாள்வதை பொறுக்கவில்லை.

தலைவன் சொன்னது தான்... நெஞ்சு பொறுக்குதில்லையே.

- கவிஜி

# அறிவே அனைத்துமாக...

விரையும் கால ஓட்டத்தில்
விரும்பும் தேவைகளும்
விளையும் தேர்வுகளும்
அதிகரிக்க
கற்றிடும் கல்வியின் நோக்கத்தால்
கருத்தினில் கூடிடும் மாற்றங்கள்.

கல்வியின் வழிமுறைகள் கணந்தோறும்
மாறிடவே
கற்பிக்கும் திறன்களில்
கலந்திடும் புதுமைகள்.

புதுமைகளின் வரவால்
கூடிடும் கவனத்தில்
மனதினில் படிப்பின் புரிதல்
உயர்ந்திடும்.

புரிதல் காட்டும் பாதையிலே
அறிவின் வழிகொண்டு



செயலின் தாக்கம் நீண்டிடும்.
செய்முறை காணும் களத்தினிலே
பெற்றிடும் அனுபவத்தின் பயணத்தில்
படைப்பவர் வாழ்வியல் வளர்ந்திடும்.

விளைந்திடும் படைப்பும் படைப்பின்
பிள்ளையென பண்பும் கரம்சேர
அனுபவம் பேசும் அணுகுமுறை.

அணுகுதல் இனிமையென்ற
அனுபவத்தின் ஆசிரியரால்
மாணவர் மனசும் மகிழ்வுறும்.

மகிழ்வில் நிறையும் கல்வியிலே
மாற்றத்தின் விதைகள் விளைந்திடும்.

ஆற்றல் பெருகும் சமூகத்தில்
அறிவே வல்லமை என்றாகும்.

- இளையவன் சிவா,
கைபேசி: 9965359130

# வா! மழையே! வா!

இப்போதெல்லாம்
மனிதனைப் போல
தாமதமாகவே வருகிறது

காய்ந்து கிடக்கும்
ஏரி குளங்களின் வயிறுகளை
நிரப்புகிறது

திருடப்பட்ட
நீர்நிலைகளை
நீரை நிரப்பிக்
காட்டி விடுகிறது

பருவம் வந்ததும்
துளிர்க்கும் காதல் போல
கிளைகளில்
துளிர்த்து எழுகிறது
பச்சை இலைகள்

கனமழை விட்டதும்
தொடரும் இசை மழையாக
தவளைப் பாடலும்

பூச்சிகளின் ரீங்காரமும்
இரவில் கேட்கிறது

கறுப்பை
ஆசையோடு சூடும்
மேகத்திற்கு
ஏழு வண்ணத் துண்டை
பரிசாக அளிக்கிறது
வானம்

ஏழை வீட்டுப்
பாத்திரங்கள்
மொத்தமாக நிறைய...
தூரத்திலிருந்து
எட்டி எட்டிப் பார்க்கிறான்
செல்வந்தன்

கடலிலிருந்தும்
கரையிலிருந்தும்
படகுகளை
வீதிக்கு அழைக்கிறது
பருவமழை

எப்போதும் போல
வேட்டியை மடித்து
வெள்ளம் சூழ்ந்த
தெருவில் இறங்குவார்
அரசியல்வாதி
அவருக்கு
குடைப் பிடிக்க
மழையில் நனைவார்
தொண்டர்

ரணங்களை மக்களுக்கும்
நிவாரணங்களை அரசியல்வாதிக்கும்
தந்துவிட்டுப் போகும்
உருவாகும் புயல்

*பருவமழையே!*
*பருவம் தவறினால்*
*எல்லாமும் பிழையாகும்*
*அளவிற்கு மிஞ்சினால்*
*அமிர்தமும் நஞ்சாகும்*

*தவறாது வா!*
*தவறு இழைக்காது வா!*
*வள்ளுவரின்*
*வான் சிறப்பாக வா!*
*வா! மழையே! வா!*



- *சா.கா. பாரதி ராஜா,*
*மனை எண் 1, ஹரிஹரன் நகர்,*
*வசந்தம் நகர் (உட்புறம்), திம்மாவரம்,*
*செங்கல்பட்டு - 603101.*
*பேச: 9944315732*

# அறிஞரை அடக்கின் அழியும் நாடு

*(Silence the Wise, Destroy the Country)*
நேரிசை வெண்பா

*அறிஞர் உரையை அடக்கும் அரசு*
*நெறிகெட்டு நீள்புகழும் நீங்கிடும் - தேறு*
*கலத்தின் நெறியறியும் மீகாமன் இன்றேல்*
*அலைகலம் போலழியும் நாடு.*



- த. வசந்த குமரன்,
*5/316, இரண்டாம் குறுக்குத் தெரு,*
*பொனியம்மன் கோயில் தெரு,*
*மேடவாக்கம், சென்னை - 600100*

# இறகொன்றைச் சுமந்தவளாய்...

அவள்தன் காப்புக் கவசங்களைக் கழற்றி
வைத்துவிடுகிறாள்,

இறகொன்றைச் சுமந்தவளாய்
லேசான மனதுடன் நடக்கிறாள்,

நேசிப்பவர்
அருகில் இருக்கும்போது மட்டும்

பேசும் வார்த்தைகளை
கவனமாகக் கேட்கும்போது,

செயல்கள் ஆசிர்வதிக்கப்படும்போது,

அவளுடைய ஆன்மா
சிலிர்த்து சிறகு விரிக்கிறது

அவள் இதயம்
அமைதியை உணரும்போது,

நம்பிக்கை
அவள் கைகளில் வைக்கப்படும்போது,

அவள் வாழ்க்கையை
இன்னும் விசாலமாக நேசிக்கிறாள்.

அங்கே
சிறு தவறுகள் மீட்சி பெறுகின்றன;
நாளைய பொழுது
பேரன்பின் சுடராய் உதயமாகிறது

அவளுக்குத் தேவை
ஒன்றே ஒன்றுதான்

தடுமாறும்போது
விட்டுவிடாத ஒரு நிலையான இதயம்!

## மென்துயர்

அன்பென்பது பாதுகாப்பல்ல,
அது நம்பிக்கையுடன் ஏற்றுக்
கொள்ளப்பட்ட
ஒரு மென்துயர்!

ஒருவர் மீதான
நம்பிக்கை என்பது
தெரியாத இருளில்
ஒருதுளி அன்பின் ஒளியில்
அடியெடுத்து வைப்பது!

பிறத்தலும் இறத்தலுமாய்
ஆகிறது
இணைதலும் பிரிதலும்...

நுண்ணிய எல்லைகளில்
உடைதலின் சாத்தியங்கள்
இருப்பினும் நம்பகத்தின் நீட்சியே அன்பு

உறவென்பது இன்மையைத் தூய்மையாய்
துணிவாய்
ஒப்புக்கொண்ட
உடன்பாடு

உடனிருப்பு
பிரிவை அறியாமலல்ல,
அதனை மௌனமாக ஏற்றுக்கொண்டு
பேரன்பு செய்யவே....!!!

## உங்கள் மௌனத்தில்

அசையும் சொற்கள்
உங்கள் ஆன்மோவோடு
ஒன்றித்தவரோடு
பேசிக்கொண்டிருக்கிறது!!

## சின்னஞ்சிறு ரகசியங்களே

மழைத்துளிகள்...
அவை நனைப்பதில்லை,
மீண்டும் எம்மைக்
குழந்தைகளாக்குகின்றன....!!!

## மறப்பதற்கும்

விடுப்பதற்கும்
தடுப்பதற்கும்
பேரளவில் வழிகள் இருந்தும்
மறுக்கி மறுக்கி
மீண்டும் மீண்டும்
மண்டியிட்டு
மாய்ந்து கிடக்கிறது
மனது
உன் அன்பை நோக்கி!

## ஆழத்தின்

அடிமட்டம் வரைக்கும்
பயணிக்கிறேன்.

மேலோட்டமாக
மிதந்து செல்வதும்,
கரையோரத்தில் நின்று
அலைகளை எண்ணுவதும்
எனக்குச் சரிப்பட்டு வராது.

முயற்சியற்ற நிலை -
என் இயல்புக்கு அந்நியமானது.

எதுவாயினும்
அதன் ஆழத்திற்குள் இறங்கி,
அதன் மௌனத்தைக் கேட்டு,
அதன் உண்மையைத் தொட்டு,
மீண்டு வருவதே
என் பயணம்...!!

## இறைவன் புன்னகைத்தான்..

இத்தனை இன்னல்களை
நீ கடக்கவில்லை எனில்
எங்கோ போயிருப்பாய் என்றான்..

இத்தனை துயர் தாங்கவில்லை
எனில் என்னை நீ
அடைந்திருக்க மாட்டாய் என்றான் ..

ஆதலால்...

சகித்துக்கொண்டிரு
செரித்து விடு
பொறுத்துக்கொண்டிரு
பற்றுத்துற
பொய்மை களை

பேரிறை புகலடைய!!

## எல்லாப் பிரார்த்தனைகளுக்கும்

அன்னையின் சாயல்

அவளருளால்
உயிர் பெறுகின்றன
பிரார்த்தனைகள்.

இறுதிவரை நோகாமல்

இளகிக்கொண்டிருக்கும்
கருணைக்கடல் அவள்.

அவள்
உச்சி முதல் பாதம் வரை
சொர்க்கங்களே...!!



- *Dr. ஜலீலா முஸம்மில்,*
ஏறாவூர்,
இலங்கை.

---

# வா வந்து அழைத்துச் செல்

வேப்பம் பூக்களில்
வெண்பனி கசிந்திருக்கும்
தூபம் காட்டிய
காலைப் பனியைப் பூசி
நாளின் பருவம்
படமெடுக்கட்டும்

விலா எலும்பிலிருந்து
எழும்பும்
சக வெளியின் சன்னதத்தை
சங்கீதமாக்க
இலைகள் இருக்கு
சரி தானே மரமே

போதும் போதும் என
பூத்த நள்ளிரவை
ஊதும் குழல் என
காதும் காதும் கேட்க
வேர் பிடித்த வானம்
வெட்கம் விட்டு விடியட்டும்

நம்புவதில்
விழிப்புக்கு அருகே
ஒரு திசை இசைக்கும்
அதிகாலை துருவத்தை
அடை காத்தலிலிருந்து
விடுவி

தலை கலைந்த தவத்தோடு
ஓடும் நதியில் ஒளியூட்டி
நீந்தும் உள் மனதை துவட்டு
அரசிப் பூக்களை
அணிந்து ஆடையிட
நதி மேடு நாணலாய் சிரிக்கும்

மறுபடி பசிக்கத்தான்
தொடுவான கால்களில்
நெடுந்தூர காலங்களில்
மினுங்குகிறான் மலரவன்

நினைத்த பிறகு
உண்மையான விடியலை
அப்படியாகவே
அணைத்துக் கொண்ட
பறவையே
வா வந்து அழைத்துச் செல்...!

## குத்துக்கல்லாய் அமர்ந்து விட்டேன்

கவிதை மனதை இழுத்து மூடினேன்
ஓவியம் சிற்பம் ஒன்றுக்கும்
நான் உதவவில்லை

எழுதுகோலை தூக்கி எறிந்தேன்
ஒளி பற்றிய உன்னதம் சன்னதம்
உளறல் இல்லை
புனைவுகளைப் பந்தாடினேன்
வீசும் காற்றுக்கு
நான் பொருட்டாயில்லை
மாயங்களை நகர்த்தி வைத்தேன்
மனதினில் துளி சத்தம் இல்லை
வண்ணங்களை விட்டெறிந்தேன்
வானத்தில் புத்தம் இல்லை
சுற்றும் பூமியை தள்ளி விட்டேன்
ஆதி அந்தம் நினைவில் இல்லை
குத்துக்கல்லாய் அமர்ந்து விட்டேன்
ஆன்மா ஞானம் முனகல் இல்லை

## நினைப்பில் அசையும்

கவனம் கொக்கு நிற்கிறது
சமிக்கையை
கண்டு கொள்ளாத மீன்
அங்கு தான் போனது

நீரோடும் வேளையிலேயே
நித்தம் நித்தம் அதன் போக்கு
தலை நீண்ட பாறைகள்
தவத்தில்

நீர் மேல் நீச்சல்
நீருக்குள் நீச்சல்
நினைப்பில் அசையும்
நீரே நீச்சல்

இக்கரையில் மரம்
அக்கரையில் கிளை
ஆகாயத்தில் ஆறு கடக்கும்
பறவைகள்

நாணலாய் அசைய
பழகவேயில்லை கால்கள்
கரையோர வேடிக்கை
காற்றடித்தும் கலைவதில்லை.

- கவிஜி

---

# பொய்மையும் வாய்மையிடத்து

நீ வெறுத்து விலகும்
இதயத்தின் கடைசி அறையில்
குப்பைக் கூலங்களாய்
என் நேயத்தின் பொக்கிஷம்.

## நானற்ற வழியை

மனமுவந்து ஏற்றாய்
நீ மிதித்துச் செல்லும்
சருகுகள் எல்லாம்
நீயன்று தழைத்து வளர்த்த
என் உயிரின் துளிர்கள்.

## தனிமையின் நஞ்சை அருந்திச்

சாவுக்குப் போராடுகிறேன்
துளியும் பாவம் பார்க்காமல்
கொலைவாளுடன் நெருங்குகின்றன
நீ அருகிருந்து ஆற்றிய
பேரன்பின் சேனைகள்

## விருப்பமில்லை என

திட்டவட்டமாய் மறுத்துவிட்டாய்
யாசிப்பதை நிறுத்ததாத நான்
கோடை வெம்மையில்
வறண்ட பூமியின்
விதைகளெனக் காத்திருப்பேன்
கார்காலம் தழைத்தல்
உன் கருணையில்தான் உள்ளது

## எல்லாக் குற்றங்களையும்

என்மீது திணிக்கிறாய்
தீர விசாரிக்காமல்
தீர்ப்பிற்குத் தயாராகிறாய்
நிரபராதியின் கடைசி விண்ணப்பம்
மரணத்தின் வாயிலில்
உன் கால்கொலுசின் சங்கீதம்
அரங்கேற வேண்டாம் பிளீஸ்.

## ஒவ்வொரு விவாத முடிவிலும்

வேண்டாம் விலகிவிடு
என்னும் முற்றுப் புள்ளிகளே...
செய்யாத தவறுக்கும்
மன்னிப்புக் கோரி
தொடர்புள்ளிகளை வைக்கிறேன்
எல்லோரும் பழிப்பது
இரக்கமற்ற அரக்கன் நான்!

## என் கடல் வற்றுகிறது

என் வானம் இடிந்து தூளாகிறது
என் காடு பற்றி எரிகிறது
என் மலை வெடிக்கிறது
என் நிலம் குமுறுகிறது
என் மூச்சு நிற்கிறது
என் உயிர் ஊசலாடுகிறது
நான் வதைந்து மடிவதைச்
சிலாகித்துக் கொண்டாடுகிறாய்
வேற்றுக் கிரகத்தில் நீ!

## என் இல்லாமையைப்

பரிபூரணமாய் நேசித்திரு நீ
உன் இருத்தலை
இறையென பூசிக்கிறேன் நான்
யாருக்கு என்ன நட்டம்
இப்படியே கழியட்டும்
பேரன்புடன் மிச்ச வாழ்வு!

## பூக்களால் வருடிய நீயேதான்

முட்களாலும் ஆழத் தைக்கிறாய்
என் குருதியின் சிவப்பை
மருதாணியாய்ப் பூசிக்கொள்
என் உயிரின் கதறலை
மெல்லிசையாய் இரசித்துக்கொள்
நான் வழக்கம்போல்
சிலுவையில் கதியற்றுச் சாகிறேன்

## நீயற்ற நான்

நடைபிணம்
நன்கறிவாய்
என்றாலும்
வெறுப்பதாய்
நடிப்பதில்
என்ன லாபம்
பேரன்பினள்
உனக்கு ?

## நிமிடத்தில் துவங்கி

மணிக்கணக்கில்

நாட்கணக்கில்
வாரக்கணக்கில்
மாதக்கணக்கில்
என்னை விலகப்
பழகிக் கொண்டாய்
எல்லாக் காலத்திலும்
உனக்காகவே காத்திருந்தேன் என்பதை
என் மரணத்திலும்
அறிய விரும்பாதது நீ.

## நீயெனக்குப்

பரிபூரண விடுதலை தந்தாய்
என் மீத வாழ்வனைத்தும்
நரகத்தின் சுழலில் என்பதை
நன்கறிந்தும் செல்.

## இன்னும் வரவில்லை நீ

வீதி முழுதும்
என் பார்வையின் சாம்பல்

## என்னைப்போல்

வேறொருவரைப் பார்த்ததாகச்
சொல்லும் அளவிற்கு
நம் சந்தித்தல் நெடுநாள்
நீண்டிருக்கிறது என்பதை
அறியவும் விரும்பவில்லை நீ.

## நீ நிராகரித்துக் கொண்டே இரு

நான் நேசித்துக் கொண்டே இருக்கிறேன்
யாருக்கு வெற்றி என்பதை
காதல் முடிவு செய்யட்டும்

## முற்றிலும் விலக நீயும்

முற்றிலும் அடைய நானும்
தீவிரமாய் யோசித்துக்
கொண்டிருந்தோம்
இருவருள்ளும் காதல்
அடைமழையை நிறுத்தவில்லை.

## தலை சுற்றுகிறது

பைத்தியம் பிடிக்கிறது
கைகால் நடுங்குகிறது
நெஞ்சம் பதறுகிறது
யோசனை மழுங்குகிறது
கண்கள் இருள்கிறது
மொழி நடுங்குகிறது
நீயற்ற நியாயத்தை
ஏற்க வலுவின்றித்
தனிமையைப் புணர்கிறேன்
இறப்பின் எல்லாக் கதவுகளின்
தாழ்ப்பாள்களும் திறக்கின்றன

## நானுன்னை

அழுகிய வார்த்தைகளால்
நிதம் வதைத்துக் கொண்டிருந்தேன்
வலிகளைப் பொறுத்து
அப்போதும் நீ
மன்னிப்பையும் மகிழ்வையும்
மலையெனவும்
கடலெனவும்
வாரி வழங்கிக் கொண்டிருந்தாய்
அடுத்ததும் என் வார்த்தைத் தடிக்கிறது
இனி இல்லாமலும் போகலாம்
இறைவியின் பெருங்கருணை.

## உன் காதலின் தூயத்தை

அமுதெனப் பருகிய நானேதான்
உன் விலகலின் நஞ்சையும்

உயிரின் பள்ளத்தாக்கில்
மேகம் வெடித்து நிரப்புகிறேன்
பிணந்தின்னிக்கழுகுகளின்
கூரிய அலகுகளால்
என் சவத்தின் மேல் வட்டமிடும்
இறந்தகாலத்தின் குகையில்
நான் மயங்கி மலர்ந்தது
உன் அன்றில் நேய மடியில் என்பது
நீ மொத்தமும் மறந்தது.

## முதன்முறை

நான் வாங்கிக் கொடுத்த
பூச்சரத்தை
எடுத்தெறிய மனமின்றி
அம்மாவிடம்
கையும் களவுமாய்
மாட்டிக்கொண்டாய்
தப்பிப்பதற்காக
நீ கூறிய பொய்களில்
அவ்வளவு காதல் இருந்தது
எனக்குப் பதிலாய்
நீத் தோற்றுவித்த
கதை மாந்தருக்கு
கோடி நன்றி
நாளை அளிக்கப்போகும்
விலையுயர்ந்த பரிசுக்கு
யாரை முன்னிருத்த போகிறாய்
பொய்மையும் வாய்மையிடத்த
புரைதீர்ந்த காதலில்.



- பொன். தெய்வா,
ஐவேலி,
விழுப்புரம் மாவட்டம்,
கைப்பேசி: 8940181811



ஓவியம்: செ. ஹரிதா,
7ஆம் வகுப்பு, ஸ்ரீ பாரதி வித்யாலயா, மன்னார்குடி.

# முயற்சியும் பயிற்சியும் முன்னேற்றம் தரும்

முடியாதது ஏதுமில்லை
முயற்சியே முன்னற்றமாகும்

பயிற்சியை எடுத்திட
படிகளில் ஏறிடலாம்

அயற்சிதனை விலக்கிடு
அனைத்தும் உனதாகும்

சோர்வது நீங்கிட
சோதனையது சாதனையாகும்

வியர்வைத் துளிகளே
வெற்றிக்கு அடையாளம்

உழைத்திடப் பழகு
உன்னதம் அடைந்திடுவாய்



எளியோருக்கு உதவிட
ஏற்றம் பெறுவாய்

தடைகளை உடைத்திடு
தரணியில் நிலைத்திடுவாய்

தோல்வியில் துவளாதே
தோளை நிமிர்த்திடு

ஊக்கத்தை வளர்த்திட்டால்
ஊன்றுகோலாய் உதவிடும்

தயங்காதே கலங்காதே
தடமது மாறிடாதே

முயற்சியும் பயிற்சியும்
முன்னேற்றம் தந்திடுமே

--
பெ. வெங்கட லட்சுமி காந்தன்.
விருதுநகர்.

# பிசாசு

ஒற்றை மரமிருக்கும்
ஊர்வெளியில்தனித்திருக்கும்
ஊரடங்கும்போதினிலே
ஓங்காரமாய்அதுசிரிக்கும்

வான்விற்றகாற்று
மரமதில்சேர்ந்திருக்கும்
கிளைகள்கையசைக்கும்
இலையதுசிலிர்த்திருக்கும்

ஒற்றையடி பாதையது
உடுக்கைவிழும்நேரமது
சாட்டையடிஓசையிலே
தலையாட்டும்மரமது

அழுகுரலும்கேட்கும்
ஆசையாய்பார்க்கும்
நிறைவேறாகோரிக்கை
நிழலாய்நினைதொடரும்

ஊரவர்கள்ஒதுக்கிடுவர்
ஊர்வெளியைவெறுத்திடுவர்
அடங்காபிசாசென
ஒற்றைமரமதுவை

ஓங்கியேஉமிழ்ந்திடுவர்

சாமக்கோடங்கி
ஊர்கததவைதட்டிடுவார்
உறங்கும்உயிரதுவோ
தாழ்திறக்கநடுநடுங்கும்

நல்லகாலம்பொறந்திடவே
நான்தட்டும்கதவதுவே
மரம்சிரித்தசப்தத்தில்
மதிமயங்கிய ஊரிதுவே

கொல்லிமலைபிசாசு
கொல்லையிலேவந்தாச்சு
கொல்லும்வழிகண்டாச்சு
கோடாங்கியோட சேர்ந்தாச்சு

ஊரடங்கிகிடந்திருக்க
உயிரோசைபதைபதைக்க
உறக்கத்தைஉலைவைத்த
பிசாசென திட்டிடுவர்

விடியும்வரைஉறக்கமில்லை
விடிந்தபின்னும்மறக்கவில்லை
ஊர்பசியைதின்றிடவே
ஊர்வெளிநின்றமரமதுவே

ஆளுக்கொருபேச்சு
ஆண்டாண்டாய் பேச்சு
ஆழ்மனதோடமூச்சு
அடங்கா மரமாச்சு

உள்ளூர ஊர்ந்தபயம்
ஊர்வெளியில்ஆடியது
தள்ளாடும்உடலோடே
தடம்மாறி போகிறது..

—

ஞா. முனிராஜ்,
அருப்புக்கோட்டை.

---

# ஊஞ்சலாட...

குழந்தைகளோடுப் போட்டி
அந்தி சாயும் சூரியன்

பல உருவங்களை பிரசவிக்கின்றன
நெருப்பிலிருந்து எழும்
புகை

பல்லுயிர் ஓம்புதலை
நிலை நிறுத்துகிறது
ஒரு பறவை

வளரும் உப்பு மூட்டையை
சுகமாக சுமக்கிறார்
தந்தை

தாயைக் கண்டதும்
புன்னகைப் பூத்து விடுகிறது
மழலையர் பள்ளி

புத்தர் சிலையின் மேல்
ஆழ்ந்த தியானத்தில்
பட்டாம்பூச்சி

சிதைந்த வீடு

சிக்கிக் கிடக்கின்றன
நினைவுகள்

தொலைத்த பொருளை தேடுகிறேன்
தொலைந்தது
நேரம்

அறுவடை செய்யப்பட்ட வயல் தனித்து
விடப்பட்டிருந்தது சோளக்காட்டு
பொம்மை

புல் மேய்கிறது மாடு
அசையவில்லை அதன் மேல்
பறவை

எரியூட்டப்பட்ட பிணம்
இழுத்துச் செல்கிறது ஆவியை
காற்று

விற்கப்பட்ட தென்னந்தோப்பு இன்னும்
கேட்கிறது
குயிலோசை



- பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்,
கைப்பேசி: 6380704001

---

# வில் எழுத்து

பிறந்து ஒரு திங்கள்
ஆகிவிட்டது

கயல் எழுதி,
கார் எழுதிவிட்ட அயன்
வில்லெழுத மறந்துவிட்டான்

இப்போதுதான்
அரும்புகின்றன
உன் புருவங்கள்

வேம்பின் எண்ணெய் தடவி
என் புருவங்களை வளர்த்த கதையைச்
சொல்கிறாள் அம்மா

இமைகள் இருக்க
புருவங்கள் எதற்கென
வினவ முடியுமா?

நிலவு இருக்க
நட்சத்திரம் எதற்கென
கேட்பது அபத்தம்

அரும்பும் புருவங்கள்
மொட்டாகலாம்
முகையாகலாம்
நனையாகலாம்

மலராகலாம்
அலராகலாம்
வீயும் செம்மலும்
அதற்கு கிடையாது நித்திலா

தீர்ந்த உன் முகத்திங்களை
திங்கள் முழுவதும்
கண்டாலும் திகட்டாது.

- மு. ஆறுமுகவிக்னேஷ்,
சத்திரப்பட்டி - 626102

# முழங்காலிட்ட முழக்கம் – கொலின் கேபர்னிக்




## இன்னும் எத்தனை முழங்கால்கள் வேண்டும்...?

ஒரு மண்டியிடலில் மூண்ட புயல்
கொலின் கேபர்நிக்

தேசியகீதம் ஒலித்தது;
லட்சம் நெஞ்சுகள் நிமிர்ந்தன;
ஒரே ஒரு முழங்கால் மட்டும் மண்ணைத் தொட்டது -
அந்த ஒரு முழங்காலில்
ஒரு நூற்றாண்டின் காயம்
கனத்துக் கிடந்தது!

- முரண் கவிதை

விளையாட்டு மைதானம் என்பது வியர்வையின் கோயில். அங்கே பல நேரங்களில் அரங்கேறுவது கால்களின் ஓட்டம் மட்டுமல்ல; ஓர் இனத்தின் உரிமைப் போராட்டமும்தான்!

அன்று அவன் கையில் கால்பந்து இருந்தது; காலடியில் கோடிகள் கிடந்தன; கண்முன்னே கைதட்டல்களின் கடல் ஆரவாரித்தது.

2013ஆம் ஆண்டு அமெரிக்க கால்பந்தின் பெருமைக்குரிய மேடையான தேசிய கால்பந்து சங்கத்தில் சான் பிரான்சிஸ்கோ “49 வீரர்கள் அணியை” சூப்பர் பவுல் வரை இழுத்துச் சென்ற இளம் குவார்ட்டர்பேக் அவன் - கொலின் கேபர்நிக்.

அமெரிக்க விளையாட்டு வானில் அப்போது அவன் ஒளிவீசிய விண்மீன். ஆனால் விண்மீன்களுக்கும் ஒரு வேதனை உண்டு - அவை மிளிரும்போதுதான் தன்னைச் சுற்றிக் கவ்வும் இருள் எவ்வளவு பெரியது என்பது தெரிகிறது.

மைதானத்திற்கு வெளியே தன் நிறத்தின் காரணமாக காவலர்களால் நிறுத்தி விசாரிக்கப்பட்ட, சந்தேகக் கண் கொண்டு பார்க்கப்பட்ட அனுபவங்கள் அவனை ஒரு மைதான வீரனிலிருந்து ஒரு சகாப்தத்தின் குரலாக மாற்றியது.

கேபர்னிக்கின் பிறப்பே ஒரு முரண்கவிதை. 1987ஆம் ஆண்டு விஸ்கான்சின் மாநிலத்தில் கறுப்பினத் தந்தைக்கும் வெள்ளையினத் தாய்க்கும்

பிறந்த அந்தக் குழந்தையை, வெள்ளையினத் தம்பதியரான ரிக் - டெரசா கேபர்னிக் தத்தெடுத்து வளர்த்தனர். அன்பு நிறைந்த வீட்டுக்குள் வளர்ந்தவனுக்கு, வாசற்படியைத் தாண்டியதும் உலகம் தன் தோலின் நிறத்தை எப்படி வாசிக்கிறது என்பது புரிந்தது. வீட்டுக்குள் அவன் ஒரு மகன்; வீதியில் அவன் ஒரு நிறம்!

அவன் தலைமுடியை ஆப்பிரிக்க அடையாள, அடர்த்தியான சுருள் முடியாக (afro) வளர்த்தான்; தோளில் பச்சை குத்தினான்; மால்கம் எக்ஸின் கறுப்பின விடுதலை வரிகளை நெஞ்சுக்குள் நெருப்பாய்ச் சுமந்தான்.

அதே நேரத்தில் அமெரிக்காவின் வீதிகளில் காவல்துறையின் துப்பாக்கிக்குண்டுகளால் கறுப்பு உயிர்கள் சாய்ந்த செய்திகள் ஒவ்வொரு வாரமும் வந்து விழுந்தன. சிந்திய இரத்தம் காய்வதற்குள் சத்திய நீதி மாய்ந்து போகும் நிலை. அவன் யோசித்தான் -

“கால்பந்து விளையாடி மகிழ்விக்கும் நான், என் கண்ணெதிரே பாதிக்கப்பட்டவர்களின் கண்ணீரைத் துடைக்கவில்லை என்றால் என் கைகள் என்ன கைகள்?“

அமர்ந்தான்... அது அடையாள போர்க்கொடி

2016 ஆகஸ்ட். முன்பருவ ஆட்டங்கள்... மைதானத்தில் தேசியகீதம் எழுந்தது; ஆயிரமாயிரம் பேர் எழுந்து நின்றனர். ஆனால் 49 வீரர்கள் அணியின் ஆட்டக்காரரர்களின் வரிசையில் ஒருவன் மட்டும் அமர்ந்திருந்தான் அசையாமல்!

முதல் இரண்டு ஆட்டங்களில் யாருமே கவனிக்கவில்லை. மௌனத்தின் மொழிக்குக் காது கொடுக்க, இந்த உலகுக்கு என்றுமே நேரமில்லை!

மூன்றாவது ஆட்டத்தில் தொலைக்காட்சி காணொலி கருவி அவனைக் கண்டுபிடித்தது. வர்ணனையாளரின் குரல் திடீரென்று தடுமாறியது. அந்த சட்டகத்தில் (frame) பதிவான காட்சி, ஒரு தேசத்தின் செல்லரித்த மனசாட்சியின் ஊடுகதிர் (x-ray) படத்தை எதிரொலித்தது. - அடுத்த நொடியில் கடலின் அடியில் புதைந்திருந்த எரிமலை வெடித்ததைப் போல, அமெரிக்கா குலுங்கியது அதிர்ச்சியில்.

ஒரு தரப்பு அவனை “மிலேச்சன்” என்று தூற்றியது; இன்னொரு தரப்பு அவனை “மீட்பன்” என்று போற்றியது. அவனுடைய ஜெர்சிகள் விற்பனைப் பட்டியலில் முதலிடத்துக்குப் பாய்ந்தன. அவன் அவற்றின் வருமானத்தைச் சமூகத்துக்கே திருப்பித் தருவதாக அறிவித்தான்.

இது வெறும் ஒரு விளையாட்டு நிகழ்வு அல்ல. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அடிமைத் தளையில் உழன்று, இன்னும் நிறவெறியின் அழுத்தத்திலேயே மூச்சுத் திணறும், கறுப்பின மக்களுக்கு ஆதரவான ஓர் அடையாள அறிவிப்பு. வார்த்தைகள் இல்லாமல், ஒரு மனிதன்

தன் உடல்மொழியையே ஒரு ஆயுதமாக்கிய... போர்க் கொடியாக்கிய தருணம்.

அமர்வதைவிட
மண்டியிடுவதே மரியாதை...

இந்த எதிர்ப்புக் குறியீட்டில் மிக அழகான திருப்பம் ஒரு படைவீரனிடமிருந்து வந்தது. நேட் பாயர் - அமெரிக்க இராணுவத்தின் சிறப்புப் படையான கிரீன் பெரட்டில் பணியாற்றி, பின்னர் தேசியக் கால்பந்து லீக்கிலும் விளையாடியவர்.

கேபர்னிக் தேசியகீதத்தின் போது நிற்காமல் அமர்ந்திருப்பது, கொடி காக்கப் போராடும் தன் சகபடையினரை அவமதிப்பதாக அவர் முதலில் வேதனைப்பட்டார்; ஆனால் கோபத்தை வசைமொழியாக்காமல், ஒரு திறந்த கடிதமாக்கினார். கடிதம் கேபர்னிக்கின் கைகளை எட்டியது. இருவரும் சந்தித்தனர்; வெகுநேரம் பேசினர்.

ஒருவன் கொடியின் நிழலில் போர்க்களம் கண்டவன்; மற்றவன் அதே கொடியின் நிழலில் அக்கிரமம் கண்டவன். இருவரும் கேட்டார்கள் - பேசினார்கள் - புரிந்து கொண்டார்கள்!

“அமர்வதை விட... மண்டியிடுவதே மரியாதை” என்றார் பாயர். ஒரு போர்வீரன் தன் வீழ்ந்த தோழனின் கல்லறை முன் மண்டியிடுவதைப் போல... மரணித்து சாய்ந்த உயிர்களுக்கு முன், பணிவும் துயரும் தெரிவிப்பதைப் போல! அதுவே முடிவானது.

*2016 செப்டம்பர் 1* - சான்டியாகோவில் தேசியகீதம் ஒலித்தபோது, கேபர்னிக் தன் ஒரு முழங்காலைத் தரையில் மெல்ல இறக்கினான் - அது ஆழ்துளைக் கிணற்றின் துளைப்பான் பாறையில் இறங்குவதைப் போல, வெள்ளை இதயங்களின் அடிமனதில் இறங்கியது.

அந்த நொடியில் ஒரு விளையாட்டு அசைவு, உலக அடையாளமாக உருமாறியது.

அது ஓர் அற்புதமான குறியீட்டு மாற்றம். இராணுவ வீரனுக்கு மரியாதை... ஒடுக்குமுறைக்கு மறுப்பு... இரண்டையும் ஒரே அசைவில் அடக்கிய ஓர் உடல்மொழிக் கவிதை.

மண்டியிடுதல் பலவீனத்தின் அடையாளமாக நூற்றாண்டுகளாய்க் கருதப்பட்டது. ஆனால் கேபர்நிக் அந்த அசைவைப் புரட்டிப் போட்டான். சிலுவை முன் மண்டியிடுவது பக்தி என்றால் நீதியின் முன் மண்டியிடுவது ஒரு யுக்தி!

வரலாற்றுப் பெருநதியின் ஓட்டம் சில நேரங்களில் திசை திரும்புவது, அதிர்ச்சி, நிலச்சரிவு நிகழ்வுகளால் மட்டும் அல்ல... சில அடையாள அசைவுகளாலும் கூட.

அலங்காரமில்லாத உண்மை - ஆயிரம் முழக்கக் கூர்மை...

மௌனமாய் மண்டியிட்டவன், வாய் திறந்தபோது வார்த்தைகள் வாளாக மின்னின.

“கறுப்பர்களையும், கறுப்பு நிறம்கொண்ட மக்களையும் ஒடுக்கும் ஒரு நாட்டின் கொடிக்குப் பெருமை செலுத்த, நான் எழுந்து நிற்கப் போவதில்லை.”

- கொலின் கேபர்னிக், *NFL* ஊடகப் பேட்டி, ஆகஸ்ட் *2016*

“தெருக்களில் சடலங்கள் கிடக்கின்றன; கொலை செய்தவர்கள் ஊதியத்துடன் விடுப்பில் செல்கிறார்கள்... இது கால்பந்தை விடப் பெரிய விடயம் . இதைக் கண்டும் காணாமல் போவது என் பங்கில் சுயநலமாகும்.”

- கொலின் கேபர்னிக், செய்தியாளர் சந்திப்பு, ஆகஸ்ட் *2016*

“இந்த நாட்டுக்காகப் போராடும் ஆண்களையும் பெண்களையும் நான் மிகவும் மதிக்கிறேன்; என் குடும்பத்திலும் நண்பர்களிலும் அவர்கள் உண்டு.”

- கொலின் கேபர்னிக் - தன் போராட்டம் படைவீரர்களுக்கு எதிரானதல்ல என்று விளக்கியபோது

எளிமையும், நேரடித்தன்மையுமே அவன் பேச்சின் வலிமை. அலங்காரமில்லாத உண்மை ஆயிரம் முழக்கங்களைவிடக் கூர்மையானது. அவனது கோபம் கொடிக்கு எதிரானதல்ல; கொடியின் கீழ் நடந்த அநீதிக்கு எதிரானது.

“நான் நிற்க மறுத்தேன். ஆம்... ஆயினும் நான் சரியான கோட்பாட்டிற்காக நின்றேன், என்பதே எனக்குப் போதும்” என்ற பொருளில் தன் நிலைப்பாட்டைப் பத்திரிக்கையாளரிடம் தெளிவுபடுத்தினான்.

தனித்து எரிவதில்லை தீப்பொறி ஒரு தீப்பொறி தனித்து எரிவதில்லை. அது காட்டைத் தொட்டதும் காட்டையே பற்ற வைக்கும்.

கேப்பர்னிக் மண்டியிட்டு நின்ற அடுத்த வாரங்களில் அவருடைய சக வீரர் எரிக் ரீட் அவனுடன் இணைந்து மண்டியிட்டான். தேசிய கால்பந்து சங்கத்தின் பல அணிகளில் வெவ்வேறு வீரர்களும், பயிற்சியாளர்களும் ஒற்றுமையாக நின்று, தோள்மேல் கை போட்டு... சிலர் முறுக்கிய கரத்தை உயர்த்தி... தங்கள் ஆதரவை பகிரங்கமாக தெரிவித்தனர்.

மேகன் ரபினோ எனும் பெண் கால்பந்து வீராங்கனை தன் சொந்த மைதானத்தில் மண்டியிட்டு “இந்த போராட்டம் என் போராட்டமும் கூட” என்று அறிவித்தாள். இது ஒரு வீரனின் தனி போராட்டமாக தொடங்கி விளையாட்டு உலகின் கூட்டு மனசாட்சியாக பரிணமித்த கதை. கூடைப்பந்து வீரர்கள், தடகள வீரர்கள், ஒலிம்பிக் வெற்றியாளர்கள் அனைவரும் தத்தம் மொழியில், தத்தம் மைதானத்தில், கேபர்னிக் தொடங்கிய அந்த அடையாள கீதத்தை பாடிக்கொண்டே இருந்தனர்.

*2017*ஆம் ஆண்டில் அமெரிக்க அரசுத்

தரப்பில் இத்தகைய வீரர்களை நீக்க வேண்டும் என்ற கருத்து வலுத்த போது, நூற்றுக்கணக்கான வீரர்கள் ஒன்றாய் மண்டியிட்டோ... கைகோர்த்தோ நின்று பதில் அளித்தனர்.

நெருப்பைத் தடை செய்ய முயன்றது காற்று. தடைவிதித்த காற்றிலேயே பற்றிக் கொண்டது நெருப்பு. இது இயற்கை முரண்.

நைக் நிறுவனம் 2018 ஆம் ஆண்டு, “எதிலாவது நம்பிக்கை வை - எல்லாவற்றையும் இழக்க நேரிட்டாலும்...”

என்ற வாசகத்துடன் கேப்பர்நிக்கை தன் விளம்பரத்தின் முகமாகியது. அந்த ஒரு விளம்பரம் வணிக உலகமே இந்த போராட்டத்தை ஒரு நெறிமுறையாக அங்கீகரித்ததற்கான சான்றாக அமைந்தது.

“கருப்பு உயிரும் உயிரே” (*Black Lives Matter*) இயக்கத்தின் தெருப் போராட்டங்களில் இந்த மண்டியிடும் அசைவே அடையாளச் சின்னமாக மாறியது.

2020 ஆம் ஆண்டு ஜார்ஜ் பிளாய்டு எனும் கருப்பின மனிதன் போலீசாரால் கொல்லப்பட்டபோது, அவனுடைய கழுத்தின் மேல் அழுத்தப்பட்ட முழங்காலுக்கும், கேப்பர் நிக்கின் மரியாதை நிறைந்த மண்டியிட்ட முழங்காலுக்கும் இடையே உலகம் கண்ட வேறுபாடு -- ஒன்று கொலையின் குறியீடு; மற்றொன்று நீதியின் குறியீடு.

## ஒரு தீக்குச்சி உரசலில், எரிந்தது உலகே...

கேபர்நிக்கின் மண்டியிடல் அமெரிக்க எல்லையைத் தாண்டி ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா என உலகின் விளையாட்டு மைதானங்கள் அனைத்திலும் எதிரொலித்தது. இங்கிலாந்தின் பிரிமியர் லீக் கால்பந்து அணிகள் ஒவ்வொரு போட்டிக்கு முன்னும் இனவெறிக்கு எதிராக மண்டியிட்டு நின்றன. ஜெர்மனியிலும், இத்தாலியிலும் இதே அசைவு, நீதிக்கான பொது மொழியாக மாறியது. மொழி வேறு, நிறம் வேறு, தேசம் வேறு என்றாலும் ஒடுக்கப்பட்டவனின் வலி எங்கும் ஒரே மொழியில் பேசப்படுகிறது என்பதை இந்த நிகழ்வுகள் நிரூபித்தன.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பும், பல்வேறு நாடுகளின் அறிவு ஜீவிகளும் கேபர்னிக்கின் அமைதியான போராட்ட முறையை, மார்ட்டின் லூதர்கிங்கின் அமைதி வழியுடன் ஒப்பிட்டு பாராட்டினர்.

ஒரு மனிதனின் ஒற்றை மண்டியிடல், பல கோடி மனிதர்களின் மௌனத்தை உடைத்த வெடிச் சத்தமாக மாறியது. இந்தியாவிலும் இந்த அலை உணரப்பட்டது. நம் நாட்டின் விளையாட்டு எழுத்தாளர்களும் சமூக ஆர்வலர்களும் சாதி என்னும் இன்னொரு ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டங்களுடன் கேபர்னிக்கின் மண்டியிடலை ஒப்பிட்டு எழுதினர்.

மொழி வேறு, நிறம் வேறு, தேசம் வேறு என்றாலும் ஒடுக்கப்பட்டவனின் வலி எங்கும் ஒரே மொழியில் பேசப்படுகிறது என்பதை இந்த நிகழ்வுகள் நிரூபித்தன.

## விமர்சனங்களும் விடையும்

தேசிய கொடிக்கு அவமரியாதை என்று அவனை விமர்சித்தோர், ராணுவ வீரர்களின் தியாகத்தை மனதில் கொண்டு பேசினர். ஆனால் கேபர்னிக் ஒருபோதும் கொடியை அவமதிக்கவில்லை. அவன் எதிர்த்தது கொடியை அல்ல; அந்த கொடியின் நிழலில் நடக்கும் கொடுமையை.

“என் நாட்டை நான் மிகவும் நேசிக்கிறேன். அதனாலேயே அதை சரி செய்ய விரும்புகிறேன்.” என்பதே அவனுடைய பதிலின் சாரம்.

நேசிப்பவன் மட்டுமே திருத்த முயல்வான்; வெறுப்பவன் வெறுமனே விலகிச் செல்வான். கேபர்னிக் விலகவில்லை ; அவன் நின்று அல்லது மண்டியிட்டு போராடினான்.

சிலர் கேட்டனர் “மைதானம் அரசியலுக்கான இடமா?” என்று. ஆனால் வரலாறே பதில் சொல்கிறது... விளையாட்டு மைதானம் எப்போதும் மனித உரிமைகளின் குரலை எதிரொலிக்கும் மேடையாகவே இருந்திருக்கிறது -- தமிழரின் காவிரி உரிமைப் போராட்டம் முதல் ஈழத் தமிழர் உரிமைப் போராட்டம் வரை !

## உலகின் பார்வையில்...

அவனது அமைதிப் புரட்சியைப் பற்றி அவனது காலத்தின் ஆளுமைகள் சொன்னவை ஆழமானவை.

“அவர் தன் அரசியல் அமைப்பு உரிமையை பயன்படுத்தி ஒரு கருத்தை தெரிவிக்கிறார்”

- பராக் ஒபாமா, அமெரிக்க முன்னாள் அதிபர் (- 2016 தமிழாக்கம்). மேலும் இந்த செயல் குறைந்தபட்சம் நாம் நடத்த வேண்டிய ஒரு விவாதத்தைத் தொடங்கி வைத்து விட்டது என்ற பொருளிலும் ஒபாமா குறிப்பிட்டார்.

படை வீரர் நேட் பாயர், ஆரம்பத்தில் மனம் வருந்தி இருந்தாலும், பின்னர் கேபர்னிக்கின் நோக்கத்தை புரிந்து கொண்டு, “அது படை வீரர்களுக்கு எதிரான செயல் அல்ல” என்பதை பொதுவெளியில் பகிர்ந்து கொண்டார்.

அவனுடன் மண்டியிட்ட எரிக் ரீட் பின்னாளில் ஒரு நாளிதழ் கட்டுரையில் “தங்கள் மண்டியிடல் ஒரு மரியாதையின் வெளிப்பாடு” என்றும் “அது ஒடுக்கு முறையை எதிர்க்கும் குரலே” என்றும் எழுதினார் .

அவனது போராட்டத்தின் தத்துவ வழிகாட்டி, மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் சிறையிலிருந்து எழுதிய வரிகள் இன்றும் அவனுக்கு பொருந்துகின்றன. “எங்கேயாவது உலகின் ஒரு மூலையில் நடக்கும் அநீதி கூட எல்லா இடத்தின் நீதிக்கும் அச்சுறுத்தல்”

(மார்டின் லூதர் கிங் ஜூனியர்

பர்மிங்ஹாம் சிறையிலிருந்து எழுதிய கடிதம் 1963)

## கதவை மூடிய மைதானம்; சிம்மாசனமிட்ட சரித்திரம்

உலகம் எந்தப் புரட்சிக்கும் எதிர்ப்பின்றி சிவப்புக் கம்பளம் விரித்ததாக வரலாறு இல்லை. எந்தச் வினைக்கும் ஒரு விலை உண்டு. அந்த விலையை கேபர்னிக்கும் கொடுக்கவேண்டி இருந்தது.

2017ஆம் ஆண்டு முதல், அமெரிக்காவின் எந்த தேசிய கால்பந்து சங்க அணியும் கேபர்னிக்கை ஒப்பந்தம் செய்யவில்லை . அவன் தன் தொழில் வாழ்க்கையை இழந்தான். கோடிக்கணக்கான டாலர் சம்பளத்தை இழந்தான். மைதானத்தின் மேடையை இழந்தான். கை தட்டல்களின் ஆரவாரத்தை இழந்தான். மைதானம் அவனுக்கு கதவை மூடியது... வரலாறு அவனுக்கு சிம்மாசனம் இட்டது.

உலகின் மனசாட்சியில் ஒரு நிரந்தர இடத்தைப் பெற்றான். அவனுடைய பெயர் இனி வெறும் ஒரு விளையாட்டு வீரனின் பெயராக மட்டும் நினைவு கூறப்படாது. அது எதிர்ப்பின் இலக்கணமாக... தியாகத்தின் இலக்கியமாக... வரலாற்றில் பொறிக்கப்பட்டு விட்டது.

“நான் என் தொழிலை விட, என் கொள்கையை நேசிக்கிறேன்” என்பதை அவன் வார்த்தைகளால் அல்ல... தன் வாழ்க்கையாலேயே நிரூபித்தான். இதுவே உண்மையான புரட்சியாளனின் இலக்கணம். புரட்சியாளன் என்பவன் இழப்பிற்கு அஞ்சாதவன்; லாபத்தை நோக்கமாகக் கொள்ளாதவன்.

அவன் நிறுவிய உன்னுடைய உரிமைகளைத் தெரிந்து கொள் எனும் அமைப்பு (Know Your Rights Camp) இளைஞர்களுக்கு தங்கள் சட்ட உரிமைகளையும் கல்வியையும் எடுத்துரைக்கும் தளமாக இன்றும் தொடர்கிறது. இழந்த மைதானத்திற்குப் பதிலாக அவன் நீதிக்கான ஒரு புதிய மைதானத்தையே கட்டியெழுப்பினான்.

ஸ்போர்ட்ஸ் இல்லஸ்ட்ரேட்டட் இதழ் அவனுக்கு முகமது அலி மரபு விருதை வழங்கியது. அது அவனுக்கு மிகப் பொருத்தமானது. அலியும் தன் சாம்பியன் பட்டத்தை இழந்து தன் கொள்கையைக் காத்தவர்.

ஆம்னெஸ்டி இன்டர்நேஷனல் அவனை “மனசாட்சியின் தூதர்” என்று கௌரவித்தது.

இழந்தது ஓர் ஒப்பந்தம்; அடைந்ததோ ஒரு தலைமுறையின் இதயம்.

## உன்னாலும் முடியும்

ஆயுதம் ஏந்தாத... அமைதியான... எளிய அடையாள அசைவுகள் கூட ஆயிரம் ஆயுதங்களை விடக் கூர்மையாய் ஆட்சியாளர்களின் மனசாட்சியில் இறங்க முடியும். பெரிய மாற்றங்களைக் கொண்டு வர வன்முறை போராட்டங்களால் மட்டுமே முடியும் என்பது அல்ல. இன்னா செய்தாரை ஒறுக்க, அவர் நாண நன்னயம்

செய்தலாலும் இயலும். வன்முறை ஒரு உடலைத் தான் வீழ்த்தும். அமைதிச் சின்னம் ஒரு சிந்தனையையே மாற்றும் . எனவே பெரிய மாற்றங்களின் துவக்கமாய் இருக்க எளிய மனிதர்களாலும் முடியும் . உன்னாலும் முடியும்.

இன்னும் எண்ணற்ற முழங்கால்கள் வேண்டும் இந்த மண்ணின் நிறம் மாற....! நிற... மத.... சாதி... வெறியின் நிழல் மறைய!

*மான்ட்கோமரி பேருந்துப் புறக்கணிப்பு, 1955 - 56; 1995 ரக்பி உலகக் கோப்பை இறுதி.*

*- ஐயா. இலரா மோகன்,*
மன்னார்குடி.



# ஆசிரியர்கள்... போராளிகளே..

மாணவர்களை
அடித்து திருத்துவது எல்லாம்
அந்தக் காலம்
படித்து வரவில்லை என்றே
பயமில்லாமல் கூறுவான்..

தண்டிக்கவும் இயலவில்லை
தடம் மாறி போவதைத் தடுக்கவும்
இயலவில்லை...

விடுமுறை எடுப்பான்...
வீட்டிலே இருப்பான்
விடிய விடிய
செல் பார்த்து
வீணாகப் போவான்...
எள்ளளவும் ஆசிரியர்கள் என்னவென்று
கேட்கக் கூடாது...

பள்ளிக்கு மாணவன் வரவே இல்லை
என்றாலும்
பாசாக்கி காட்ட வேண்டும் ...

நூறுசதவீதம் தேர்ச்சி வேண்டும்
பேரு எடுத்துக் கொடுத்து பள்ளிக்கு
பெருமையும் சேர்க்க வேண்டும் ..

சிகையை வெட்டச் சொன்னால்
பகையுடனே வலம்வந்து
மிகையுடனே நடந்துகொள்வான்..

கண்டிக்க விடாமல்
கைகளைக் கட்டும் பெற்றோர்கள்..
தண்டிக்க விடாமல் தடுக்கும்
சட்டங்கள்...

சுயமரியாதையைக்
காத்துக்கொண்டு
சத்தமின்றி போராடும் ஆசிரியர்கள்
போராளிகளே....

*- யாழ் மொழியாள்,*
பொள்ளாச்சி.

# போகோவோடு பொழுதைக் கழிக்கும்

குழந்தைகளை வெளியில்
ஓடியாடி விளையாடச் சொல்லிக்
கத்திக்கொண்டே இருக்கின்றன
அலைபேசிக்குள் மூழ்கிக் கிடக்கும்
இரண்டு கால் விலங்குகள்

குழந்தைகளை முகர்ந்துவிட்டு
“அவ்”வென செல்லங் கொஞ்சி
நாளும் விளையாட அழைக்கிறது
பக்கத்து வீட்டுக்குப்
புதிதாக வந்திருக்கும்
நாலு காலு
புசுபுசு ரோசி பாப்பா

இப்போதெல்லாம்
வாலையாட்டிக் கொண்டே
ரோசியையே சுற்றி வருகின்றன
குழந்தைகள்!

## வாரமொரு முறை

செய்கிற வெண்பொங்கலில்
நாசி துளைத்து ஊடுருவும்
சீரகம் மிளகு பொறித்த
அங்காடி கடை
எண்ணெய் வாசம்

சமையற்கட்டின்
அலமாரித் தட்டில்
நிறைய அடுக்கப்பட்டிருக்கும்
முதலாளி வீட்டிலிருந்து
எடுத்து வந்த
பெரிய பெரிய
காலி நெய் போத்தல்கள்

- பி. ஹேமா,
முசிறி.

---

# யார்?

கோபம் வந்தால்
கழுத்து நரம்புகள் புடைக்க கத்தும்
'மனித வழக்கத்தை
சொல்லிக்கொடுத்து யார்

தன் எல்லைக்குள்
வந்து விட்ட
சக உயிரினத்தைப்பார்த்து
அலறும் நாய்க்கு..

## மற்றும் சில

சுற்றி சுற்றி வருகின்ற
தீர்வு கிடக்கா
நெடு நேர சிக்கல்களுக்கு
புத்துணர்ச்சி பெற்று
யோசித்து தீர்வு காண

உடல் ஓய்வு
அதைப்பற்றிய
சிந்தனையில்லா
புத்தி ஓய்வு
தவிர்த்து

மற்றும் சில

தனக்கே தனக்கான
விஷயங்களில் ஈடுபாடு

உறவிடத்திலோ
நட்பிடத்தோ
பேச்சு

வெளியுலகம்
பார்த்தல

## தேடிப்பிடித்து...

அவசிய தேவைகளுக்கு
உதவி புரிய மறுக்கும்
மூளையின் ஞாபகச்செல்கள்

கோபம் ஏற்படும் சம்பவங்கள் நிகழும்
போது
'பழைய இழப்புகளையும்'
தேடிப்பிடித்து
நினைவில் நிறுத்தி
'ஆவேச உணர்வுகளை
உச்சத்திற்கு
கொண்டு செல்கிறதே
அது ஏன்

## முன்னராய்...

கருத்து மோதல்
கணங்களில்

எதிர் வாதம்
சொல்ல துவங்குகையில்

ஏற்புடையாமையை
அடுக்க ஆரம்பிக்கையில்

எதிர்மனிதர்
உதட்டுமொழி முடிக்கையில்

சரி...
அதுக்காக..

## ஒர் அணியில்..

நாளைய பற்றிய
பயத்தில்
நேற்றைய தோல்விகளும்
இழப்புகளும் வேதனைகளும்

நாளையவைக்கான
நம்பிக்கையில்
நேற்றைய
வெற்றியும் பாராட்டும்
அங்கீகாரமும்
கூடவே

ஞாபகச்சேமிப்பிலிருந்து
ஒர் அணியில

## அந்த வார்த்தைகள்

முடிவு தெரிவுக்கு
குழப்ப தெளிவுக்கு
சிக்கல் விடுவிப்புக்கு
இழப்பின் ஆறுதலுக்கு
தோல்வியின் விரக்தியில்
மாற்று யோசனைக்கு
வேண்டுவன கிடைக்க
எதிர்ப்பார்ப்பு எதிரே வர

ஏமாற்றங்கள் இல்லாமைக்கு
உதட்டு மொழியாற்றுகையில்

நம்பிக்கையாய்
செவி கேட்க ஆசைப்படும்
வார்த்தைகள்
ஒன்று சொல்லவ

## அப்ப மட்டுமா?

தனித்த பொழுதுகளில்
மட்டுமா
முந்தைய வெற்றியால்
நம்பிக்கை
தோல்வியால்
பய பதற்றம்

இல்லை இல்லை

செயல்பாட்டு பயணத்தின்
இடையிலும்
அந்த கணத்து நிகழ்வுகளை
பார்த்து
நினைத்தபடியே
செல்கிறது என உவகை
சரியாக போகவில்லேயே
தோல்வி தானோ
என்ற நம்பிக்கை
குறைவும

## வேண்டுவன

வாசிப்பு
யோசிப்பு
உன்னித்தல்
உணருதல்
வெளிப்பாடு
வசீகரம்
யதார்த்தம்
உள்ளீடின் கனம்
அங்கீகாரத்திற்கான உழைப்பு
விமர்சனத்தை ஏற்கும் பக்குவம்
இத்தனையும்
வேண்டும்
படைப்புக்க

## காட்சிக்குள் காட்சியாய்..

தொலைக்காட்சியிலோ
பத்திரிகையிலோ
சமுக ஊடங்களிலோ
வெளி உலகம் பார்க்கையிலோ

தன்னுடைய
வாழ்க்கையின்
பின்னோக்கிய
நிகழ்காலத்திய
எதிர்கால
நிகழ்வுகளை
காட்சிக்குள்
காட்சியாய்
எண்ணிப்பார்ப்பது
மனித மனத்தின்
இயல்பு தானே?

## ஆச்சரியம்...

குரல் வளம் உள்ள மனிதன் அமைதி
காக்க
அஃறிணைகள்
விடாமல்
ஒன்று மாற்றி

ஒன்று பேசிக்கொண்டிருந்தன
அருகருகே
இரண்டு கடிகாரங்கள்...

## சிரியாய் சிரிக்கும்...

பள்ளி காலத்தில்
தான் விடுமுறை எடுக்கும் போது
பள்ளியே விடுமுறையாக
இருக்கக்கூடாதா என்ற ஏக்கத்தையும்

வகுப்பில் முதல் இடத்தை
தவற விட்ட
வருத்ததையும்

ஒரு நேர்முக தேர்வில்
தோல்வி கண்ட
சோகத்தையும்

இன்று சிரியாய் சிரிக்கிறது
புத்தி

ஆனால் அதற்கு தெரியவில்லை

இன்றைய சோகங்களும்
நாளைய சிரிப்பாய்
போகிறது

அப்போதைய புத்திக்கு...

## தத்தித்தாவுது மனது..

வார விடுமுறையில்

சேர்த்து வைத்திருக்கும்
சொந்த பணிக்கு
கொஞ்சம்

ஒய்வு கொடு
என்று ஆறு நாளும்
கெஞ்சி கொண்டிருக்கும்
புத்திக்கு கொஞ்சம்

வேலை நாளில்
சாத்தியப்படாத
இறையிடத்து
நீண்ட நிதான
வழிபாடு

நேரில் முடியாவிட்டாலும்
உறவுகளிடத்தும்
சகாக்களிடம்
அலைபேசி உரையாடலுக்கு
கொஞ்சம்

தனக்கேகான
தன் விருப்பம்
இன்று மட்டுமே
சாத்தியம் என்பதால்
அதற்கு கொஞ்சம்

இப்படியாய்
விடுமுறைக்கு
முந்தைய நாள்
யோசித்து

இறுதியாய்
அந்த நாளில்
யோசிப்புக்கு
கொஞ்சமும்
தொடர்பில்லாத
ஒன்றின் மேல்
ஈடுபாடு கொண்டு

முழு நாளையும்
செலவழிக்கிறது
தத்தித்தாவுது மனது...

## அப்படி என்றால்

நேற்றைய
பயணம் எப்படி

சென்ற மணவிழா
சொல்

நேர்முக தேர்வு
நன்றாக செய்தாயா

வார விடுமுறை
எவ்வாறு போனது

கேள்விக்கு
அதை ஏன் கேட்கிறாய்
என்ற கேள்வி பதிலானால்

மீக நீண்ட
நேர்மறை எதிர்றை
செய்தி இருக்கிறது
என அர்த்தம்

## எனினும்

இன்றைய
பதற்றமும்
பயமும்
செயல்பாடு
முடிந்த பின்

ஏற்படும் நிம்மதி
உணர்வுகளை
வெளிப்படுத்த
வார்த்தைகள்
போதாதே

அனுபவித்தே
அறிய முடிய
முடியும்

இவை மீண்டும்
தொடரும் எனினும்

—

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை.



# இருந்தும் இல்லை

அன்று

காதல் வந்த போது
வேலை இல்லை...

வேலை இருந்த போது
காதல் இல்லை...

காதல் இருந்த போதும்
வீடு இல்லை...

வீடு இருந்த போதும்
தலையில் முடி இல்லை...

முடி இருந்த போது

முடிவு எடுக்க வில்லை...

இன்று,

முடிவு எடுத்தபின்
தலையில் முடி இல்லை...

வேலை இருந்தும் மாப்பிள்ளை
ஊரில் இல்லை.

ஊரில் இருந்த போது
சம்பளம் போதவில்லை...

பிடித்த பெண்ணிற்கு
சாதகம் பொருந்தவில்லை..

சாதகம் பொருந்திய பெண்ணிற்கு
என்னை பிடிக்கவில்லை...

என்னை பிடித்த பெண்ணிற்கு
ஊர் கிராமம் என்பதால்

பிடிக்கவில்லை...

பொய்யாக இருந்த
மெய்யாக பார்க்க தெரியவில்லை...

வராத கோபத்தை வர
நான் சொல்லவில்லை...

வந்த கோபத்தை
ஏனோ தடுக்க வில்லை...

குறை இருந்தும்
குறை சொல்ல தெரியவில்லை...

நிறை இருந்தும்
நித்தம் மகிழ முடியவில்லை...

—

கார்த்தி

---

# திண்ணை வீடு

திண்ணை வைத்த
வீடு வேணும்
தினமும் அதில் அமர வேண்டும்...

வீதியெங்கும்
வெள்ளமாக
விளையாடும்
குழந்தைகளை
கண்டு நானும்

களிக்க வேண்டும்..

தெருவினிலே
விற்றுவரும் பொருளையே
தருவாயா என்று
பேரம் பேசி வாங்க வேண்டும்...

திண்ணையிலே
கதைப் பேசி
என்னையே நான்
மறக்க வேண்டும்...

இளைப்பாறத் திண்ணையென்று

எல்லோரையும் அமர வைத்து
இனிக்க இனிக்க பேச வேண்டும்..

வாழ்வியலும் இனித்திடவே
வழிநெடுகிலும் பூத்தூவியே
வசந்தமாக மாற வேண்டும்...

இலக்கினை அடைகிறேன் என்று
எப்பொழுதும்
அடைந்து கிடக்கும்
அர்த்தமற்ற வாழ்வைவிட்டு...

திண்ணையிலே
அமர்ந்து கொண்டே
தினமும் வாழ்வை ரசிக்க வேண்டும்

- யாழ் மொழியாள்,
பொள்ளாச்சி.

---

# நாங்கள் அழகானவர்கள்

நெடுநாள் தோழியோடு நெடு நேரம் பேசிக்கொண்டிருந்தேன். அடிக்கடி பேசுவதில்லை. இப்படி நாள் கிடைக்கும் போது நேரம் காலம் பார்ப்பதில்லை.

நிறைய விடயங்கள்... ஊர் பற்றி... உறவுகள் பற்றி... சொந்த பந்தங்கள் பற்றி.. நாங்கள் மணிக்கணக்காக நின்று பேசிய பெரிய வீதி பற்றி... எங்கள் நட்பு குறித்து எப்போதும் தப்பாகவே அர்த்தம் கொண்ட மனிதர்கள் பற்றி... இன்றைய தலைமுறைகளின் வாழ்வியல் குளறுபடி பற்றி...

இப்படி நிறைய பேசினோம். பழைய நினைவுகளில் இந்த வாழ்வு சட்டென மலர்க்கொத்து சூடி விடுகிறது. இதயம் நிறைந்த ஒரு குதூகலம்... உடனே வந்து ஒட்டிக்கொள்கிறது. ஒரு பிருந்தாவனத்தில் காலாற நடை போடுவது போல... எங்கெங்கோ சிதறிக் கிடக்கும் நம்பிக்கைகள் எல்லாம் ஒன்று கூடி விடுகிறது.

பேச்சு... அறிவு பற்றி ஞானம் பற்றி இறை பற்றி இதயம் பற்றி என ஒரு புள்ளியில் ஆரம்பித்தாலும் நாங்கள் பேசி முடிக்கையில்... ம்ம்.. முடியாது... நேரம் கருதி அதுவாகவே ஒரு புள்ளிக்கு வருகையில்... என்ன பேசினோம் என்றே மறந்திருக்கும். ஆனால் எல்லாம் பேசியிருப்போம். பார்க்க பார்க்க ஓடி விட்ட வயதின் விளிம்பில் ஆளுக்கொரு முனையில் அமர்ந்திருக்கிறோம். வெளியெங்கும் அமைதி.

நாலு பேர் என்ன சொல்வார்கள் என்ற கட்டுப்பெட்டி கட்டமைப்பை நாங்கள் அப்போதே அடித்து நொறுக்கியவர்கள். என்ன... அது திமிர்வாதமாக ஒரு பிம்பத்தை எங்கள் மேல் கட்டியிருக்கிறது. அதற்கெல்லாம் கவலைப்பட்ட ஆட்களே இல்லை. ஆண் பெண் நட்பு குறித்தான முதல்

வெடிப்பை எங்களூரில் நிகழ்த்தியவர்கள் நாங்களே.

பேரன்பு இருக்கும் இடத்தில் மற்றவரின் மொக்க கருத்துக்கு இடமே இல்லை. வெறும் வாய்களோடு திரியும் மனிதர்களை நாம் கவனிக்க வேண்டிய தேவை இல்லை. முகத்துக்கு நேராக பேச முடியாத முனகலே முதுகுக்கு பின்னால் மேளமடிக்கும்.

எத்தனை வசவுகளை மனரீதியாக வீழ்த்தும் நமக்கான மதிப்பீடுகளை... இன்னும் சொல்லப்போனால் நமது நடத்தையையே பொலி போடும் எத்தனையோ சந்தர்ப்பங்களை நாங்கள் நேருக்கு நேராக சந்தித்திருக்கிறோம். அடிப்படை வாதங்களை.. தட்டையான போலி கட்டமைப்புகளை... போல செய்தல்களை... அது அதுதான் என்று தெரியாத போதே அதற்கு எதிராக நின்றிருக்கிறோம். நிற்கிறோம் என்று தெரியாமலே. இயல்பிலேயே படைப்பு மனம் எங்களுக்குள் நிகழ்ந்திருக்கிறது. அது காட்டிய ஒளி வழியே இருளையும்.. இருள் வழியே ஒளியையும் காண முடிந்திருக்கிறது.

தேடல் கொண்ட அறிவில் சோம்பேறித்தனம் வந்து குடியேறாது. தானாய் கிடைத்த சிறு வாழ்வில் பேரன்பு இருக்க பெருமை எதற்கு.
குறை கூறும் மனிதர்களிடம் இருந்து விலகி இருக்க நிறை பேசும் உள்ளம் கொள்.
எடுத்தெறிந்து பேசுவது போல தோன்றி இருக்கலாம். அது எடுத்து வைத்து பேசுவது என்று இன்று புரிகிறது.

அறிவிலிகள் மத்தியில் தான் ஆத்மார்த்தம் அடைய போராட வேண்டியிருக்கிறது.

இப்படி பேச்சு எங்கெங்கோ போனது. அங்கெல்லாம் மூச்சின் இனிமை.

மனம் விட்டு பேச நமக்கான மனிதர்கள் இல்லை என்பதுதான் இங்கே மானுட குலம் முன் வைக்கும் தவிப்பு தர்க்கம் இயலாமை இருப்பு எல்லாம். மனதை விட்டு விட்டு பேச தொடங்கி விட்டால்.. நமக்கான மனிதர்களை நாம் கண்டடைந்து விடுவோம்.

அறிவுக்குள் நுழைய மனத்தை விட்டொழிய வேண்டும். ஞானம் வேண்டுமானால் அறிவு மாயைக்குள் சிக்காமல் இருக்க வேண்டும். ஒருவர் பேசுகையில் ஒருவர் கேட்க வேண்டும். ஒருவர் கேட்கையில் தான் ஒருவர் பேச வேண்டும். உடனிருப்போருக்கு இடம் விடுதல்.. அது விடுதலாக இருக்க கூடாது. இயல்பான விடுதலையாக இருக்க வேண்டும். நட்புக்கு தரும் மரியாதை... நான் நீ மறந்து நட்பாகவே மாறி விடுவது. இல்லையெனில் 30 வருட நட்பு என்பது எப்படி சாத்தியம். இதே காலத்தில் வந்த எத்தனையோ பேர் ஓடி ஒளிந்து காணாமலே போய் விட்டார்களே. எப்போது தோன்றுகிறதோ அப்போது பேசலாம். ஆனால் விட்ட இடத்தில் இருந்து தொடர அந்த தோன்றலுக்குத் தெரிய வேண்டும். அதுவே பலம். சின்னச் சின்ன

சண்டைகள் வரும் போகும். ஆனால் சித்தத்தில் எழுந்த அன்பின் உருவம் உடையாது. இத்தனைக்கும்... அவர் இறையோடு பிரார்த்திப்பவர். நான் இறையை நண்பன் என்பவன். ஆனாலும்... இசை தூவாமலா இருக்கிறது எங்கள் நட்பு.

எந்த உறவிலும் ஒப்புக்கொடுத்தல் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. வானத்துக்கு ஒப்புக்கொடுத்த சிறகுகளே தூரதேசம் போகின்றன. வனத்துக்கு ஒப்புக்கொடுத்த ஓடைதானே அருவியாகி ஆறாகி கடலாகவும் ஆகிறது. சரணடைதலில் அன்பு பேரன்பு ஆகி விடுகிறது. தன்னை யார் என்று உணர்ந்து விட்டால் தன்னோடு இருப்பவர் யார் என்றும் உணர்ந்துவிட முடியும்.

நாம் நம்மை உணர்கையில்... நம்மை கையாளுகையில்... நம்மை பொருட்படுத்துகையில்... நம்மை நாமே நேசிக்கையில்... நமக்கான ஆட்களை நாம் எத்தனை கூட்டத்திலும் சரியாக கண்டுபிடித்து விடுவோம். மேல் சொன்ன வார்த்தைகளின் தெளிவு எங்கள் சின்ன வயதில் இருந்ததா என்றால் தெரியவில்லை. ஆனால் நாங்கள் அறிவாளி பசங்க. அழகானவர்கள். இங்கே அழகென்று சொல்வது உடல் குறித்து அல்ல. உயிர் உணர்கையில் வெளிப்படுவது அது. எங்கள் இதயத்தில் எப்போதும் இன்னொருவர் பற்றிய கரையைக் கொண்டிருக்கவே இல்லை. உறுதியாக சொல்ல முடிகிறது.

பேசப் பேச சொற்கள் கூட வேறென்ன வேண்டும். அன்பைத் தவிர. வாழ்வின் பொருள் இப்படியான உறவுகளில் தானே அர்த்தமாகிறது.

— கவிஜி

---

# தங்க பதக்கம்!!

அந்த விளையாட்டு மைதானத்தில் கூட்டம் பொங்கி வழிந்தது. திருச்சியில் பிலிப் மைதானத்தில் மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடந்து கொண்டிருந்தன.

திலகர் நூறு மீட்டர் பந்தயத்தில் முதலாவதாக வந்த ரோசினியைப் பார்த்துக் கொண்டிருந்தான். எல்லோரும் அவளிடம் கையெழுத்து வாங்குவதற்காக மொய்த்துக் கொண்டிருந்தார்கள். மாநில அளவில் பல விளையாட்டுப் போட்டிகளில் தங்க மெடல்கள் குவித்துக் கொண்டிருந்தாள் ரோசினி.

அதோடல்லாது அவளது சிவப்பு நிறமும் உடல் அமைப்பும் அழகிய நளினமும் எல்லோரையும் எளிதில் கவர்ந்து கொண்டிருந்தது. அடுத்த போட்டிக்கான அறிவிப்பைத் தொடர்ந்து உயரம் தாண்டுதல் போட்டிக்கு தயாராகிக் கொண்டிருந்தாள் ரோசினி.

தூய சேவியர் மேல் நிலைப்பள்ளி ஆசிரியர்கள் கனவையும், தன் தாய் தந்தையரின் கனவையும் தன் கனவுகளோடு சுமந்து கொண்டு அந்த விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள வந்திருந்தான் திலகர்.

உயரம் தாண்டுதல், குண்டு எறிதல், நீளம் தாண்டுதல் மற்றும் ஈட்டி எறிதல் நான்கு போட்டிகளிலும் கண்டிப்பாக தங்கம் வாங்கி அகில இந்திய அளவில் போட்டிக்கு சென்று அதையும் தாண்டி ஒலிம்பிக் போக வேண்டும் என்ற கற்பனைகளோடு வந்தவன் தங்களுடைய போடட்டிகள் மறு நாள் நடக்க இருப்பதால் வேடிக்கை பார்க்க வந்திருந்தான்.

திரும்பவும் ரோசினி உயரம் தாண்டுதலில் முதலாவதாக வர கூட்டம் கைத்தட்டல்களால் உற்சாகப்படுத்தியது. அடுத்த தங்கம் வாங்கி விட்டதும் கூட்டத்தைப் பார்த்துக் கையசைத்து விட்டுப் போனாள் ரோசினி.

திலகருக்கு, அவள் தன்னையே பார்த்துக் கையசைத்து விட்டுப் போனது போல இருந்தது. ரோசினி எத்தனைத் தங்கம் வாங்கிக் குவித்தாலும் ஒரு அலட்டல் இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறாள். நான் அவளை அதிகம் விட சாதிக்க வேண்டும் என்று எண்ணியவாறு எழுந்த போது ஓடி வந்த அந்தப் பெண் “சார் நீங்கள் திலகர் தானே?” என்றாள்...

“ஆமாம்...”

“உங்களை ரோசினி பார்க்க வேண்டுமாம். உங்களைத்தான் தன் அறைக்கு வரச் சொன்னாள்...”

அவனுக்குள் ஆச்சரியமாக இருந்தது. ரோசினியிடமிருந்து தனக்கு அழைப்பு வந்தது அவனுக்கு சொர்க்கத்திலிருந்து அழைப்பு வந்தது போல் தோன்றியது.

“எங்கே இருக்காங்க...”

“பெண்கள் தங்கும்விடுதி அறை எண் 315 மூன்றாவது மாடி...”

“நீ போ நான் அவர்களைப் போய் பார்க்கிறேன்.”

“சார். உங்களைத் தான் உடனே பார்க்க வேண்டும் என்றார்கள்..”

“சரி. நான் அங்கே தான் கிளம்புகிறேன்...”

“வாங்க திலகர். உங்களைச் சந்திக்க வேண்டுமென்று போன வருட விளையாட்டு சந்திப்பிலேயே ஆசைப்பட்டேன்” என்றாள் ரோசினி. இப்போது சல்வார் கம்மீசுக்கு மாறியிருந்தாள்.

“ரொம்ப நன்றி. நான் கூட உங்களை சந்திக்க வேண்டுமென்று ஆசைப்பட்ட துண்டு. என்ன விடயமாக கூப்பிட்டீர்கள்?”

“நிற்கிறீர்களே.. உட்காருங்கள். குளிர்பானங்கள் சாப்பிடுகிறீர்களா?” என்றவாறு ஒரு பெப்சி குடுவையை திறந்து இரண்டு கோப்பைகளில் ஊற்றினாள்.

“ரொம்ப நன்றி” என்றவாறு பெப்சியை எடுத்துப் பருகினான் திலகர்.

“ஐயா, உங்களால் எப்படி உயரம் தாண்டுதலில் இவ்வளவு உயரம் தாண்ட முடிகிறது. எப்படி பயிற்சி எடுத்தீர்கள் என்று சொல்ல முடியுமா?” என்றவாறு அருகில் அமர்ந்தாள்.

அவளின் அருகாமை அவனை கிளுகிளுக்க வைக்க “என்ன ஒரு மாதிரி இருக்கிறீர்கள் உடலுக்குச் சுகமில்லையா?” என்றவாறு நெற்றியில் தொட்டுப் பார்த்தாள்.

திலகர் நிலை குலைந்து போனான். அவளுடைய அருகாமை, அவளிடத்திலிருந்து வந்த மணம் எல்லாம் அவனை எங்கேயோ அழைத்துச் சென்றது.

“என்ன திலகர் சார் ஒன்றுமே பேச

மாட்டேன் என்கிறீர்கள்?" என்று அவன் கன்னத்தில் கைவைத்தாள்.

"ஒன்றுமில்லை.. உங்களுக்கு பயிற்சி தருவது யார்?" என்றான் கொஞ்சம் யோசித்துக்கொண்டே.

"எனக்கு பயிற்சியாளர் எங்கள் விளையாட்டு ஆசிரியர் தான். உங்களுக்கு இந்த சட்டை மிகவும் அழகாக இருக்கிறது" அவன் காலரை பிடிக்க திலகர் எங்கோ போய்க் கொண்டிருந்தான்.

"ரோசினி என்ன விஷயமாக என்னைக் கூப்பிட்டீர்கள்?"
"ம்... புரியாத மாதிரி தான் பேசுகிறீர்கள். உங்களுக்கு போட்டி எப்போது?"

"நாளை காலையில் ஆரம்பிக்கிறது".

"ஐயையோ.. நாளை திருச்சியைச் சுற்றிப் பார்க்க உங்களை அழைத்துக் கொண்டு போகலாம் என்றல்லவா நினைத்தேன்..."

"என்ன சொல்கிறீர்கள் ரோசினி..."

"என் நண்பர்கள் யாரும் வரவில்லை. என்னுடைய விளையாட்டு எல்லாம் முடிந்து விட்டது. இனி மாரத்தான் போட்டிகள் நாளை மறுநாள் தான் நடக்கப்போகிறது. நாளை எனக்கு விடுமுறை தனியாகத்தான் இருப்பேன். வர முடியுமா?" அவனைக் கிறக்கமாகப் பார்த்தாள் ரோசினி...

"அது.. வந்து.. நாளை நடக்கிற எல்லா போட்டிகளிலேயும் நான் கலந்து கொள்ள வேண்டியிருக்கிறதே..." இழுத்தான் திலகர்.

"மற்றபடி உங்கள் விருப்பம் திலகர். நாளைக்கு மட்டும்தான் விடுமுறை..."

"ம்... எனக்கு நாளைக்கு... இல்லை வருகிறேன்..."

"சிறப்பு" அவன் எதிர் பார்க்காதலாறு அவன் கன்னத்தில் முத்தமிட்டாள் ரோசினி.

இரவில் அவள் பள்ளியைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் அந்த விளையாட்டு மைதானத்தின் ஒரு ஒரத்தில் அமர்ந்திருந்தார்கள்.

"என்ன ரோசினி நாளைக்குத் திலகர் விளையாட வருவானா? இல்லை உன்னோடு அழைத்துக் கொண்டு வெளியே போகிறாயா? நீ என்ன செய்வாயோ தெரியாது. அவன் போட்டிகளில் விளையாட வந்தால் நம் பள்ளிக்கு ஆண்கள் பக்கத்தில் ஒரு தங்க பதக்கம் கூட கிடைக்கப் போவதில்லை" என்றான் சங்கர்.

"கவலைப்படாதே.. கண்டிப்பாக அவனை விளையாட்டு அரங்கத்திக்கு வர முடியாதபடி பார்த்துக் கொள்கிறேன்" என்று சிரித்தாள் ரோசினி.

"அவன் மட்டும் போட்டிகளில் கலந்து கொள்ளா விட்டால் உயரம் தாண்டுதலில் போட்டியில் தங்கம் எனக்குத்தான்" என்றான் சங்கர்.

"நூறு மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வென்று தங்கம் வாங்கப் போவது நான் தான்" என்றான் பழனி.

"வட்டு எரிதலில் தங்கம் எனக்குத்தா" என்றான் நாராயணன்.

"எல்லாம் ரோசினியின் கையில்தான் இருக்கிறது.." என்றாள் தேவகி.

"கவலையே படாதீர்கள், திலகர் போன முறை ஏழு தங்க பதக்கங்களை தட்டிச் சென்றான். நம் பள்ளிக்கு ஒன்று கூட கிடைக்காமல் போனது. இந்த முறை அவன்

எந்தப் போட்டிகளிலும் கலந்து கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது என் பொறுப்பு” என்றாள் ரோசினி.

“வெகு சிறப்பு” என்றான் சங்கர் ரோசினியைப் பார்த்து கண்ணடித்துக் கொண்டு...

இரவில் தூங்க முயற்சி செய்து கொண்டிருந்தான் திலகர், ரோசினியின் எதிர்பாராத முத்தமும் அவள் அருகாமையும் அவள் அங்கங்களின் உரசலும் எண்ணம் முழுவதும் அவளையே தேடிக் கொண்டிருந்தது. எத்தனை பேர் கனவுகளைச் சுமந்து கொண்டு தங்கப் பதக்கங்களைத் தட்டிச் செல்ல வந்தேன். இந்த முறை தங்கம் வாங்கவில்லை என்றால் அகில இந்திய விளையாட்டு போட்டிகளுக்கோ அதற்கடுத்து ஒலிம்பிற்கோ போக முடியாது.

ஆனால் ரோசினிக்கு நாளைக்கு விடுமுறை எதிர்மறையாக என்னை அழைத்திருக்கிறாள். என்ன செய்யப் போகிறேன் என்று எண்ணிக் கொண்டே தூங்கிப் போனான்.

காலையில் திலகர் ஒக ஆசனம் செய்து கொண்டிருக்கும் போது வேகமாக புயல் மாதிரி உள்ளே நுழைந்தாள் ரோசினி. திலகர் இன்னும் கிளம்பவில்லையா? என்று கேட்டவாறு.

இரு புறப்பட வேண்டியதுதான் என்று அவன் எழுந்ததும் திரும்பவும் அவளின் எதிர்பாராத முத்தத்தால் தாக்கப்பட்டான்.

சிறப்பு தம்பி சீக்கிரம் குளித்து விட்டுக் கிளம்புங்கள் என்றவாறு அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்து தினசரி எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள் ரோசினி.

கொஞ்ச நேரத்தில் குளித்து விட்டு விளையாட்டிற்கான உடையணிந்து கொண்டு வந்த திலகரைப் பார்த்துத் திடுக்கிட்டு என்ன திலகர்? என்னோடு வருவதாக சொன்னீர்களே? என்றாள் கோபத்தோடு.



ரோசினி மத்தியானம் வரை போட்டிகளில் கலந்து கொண்டு விட்டுக் கிளம்பலாமே.

நான் முக்கியமா? உங்களுக்கு விளையாட்டு முக்கியமா? என்று மிக அருகில் வந்தவளை ஒதுக்கிவிட்டு ரோசினி உன் தங்கம் போன்ற உடலை விட நான் கனவு கண்ட தங்க பதக்கங்கள் தான் எனக்கு முக்கியம் வருகிறேன் என்றான்.

**-கவிமணி இரஜகை நிலவன்,**

மும்பை.



**ஓவியம்:**

**மா. நிரல்யா,**

**மூன்றாம் வகுப்பு, சிங்கப்பூர்.**

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: *thiravukolfdbk@gmail.com*
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: *thiravukolsubmit@gmail.com*
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.